UNIVERSAL LIBRARY
OU_208130
UNIVERSAL LIBRARY

# 'உந்து' என்னும் இடைச்சொற் பிரயோகம்

அல்லது

# புறநானூற்றின் பழைமை.


சென்னை சர்வகலாசாலைத் தமிழ் ரீடர்

கே. என். சிவராஜ பிள்ளை, பி.ஏ.,

எழுதியது.



சென்னை சர்வகலாசாலைப் பிரசுரம்.

---

1929

Price, As. 12] [விலை அணா, 12.

# 'உந்து' என்னும் இடைச்சொற் பிரயோகம்

அல்லது

# புறநானூற்றின் பழைமை.

சென்னை சர்வகலாசாலைத் தமிழ் லீடர்

கே. என். சிவராஜ பிள்ளை, பி.ஏ.,

எழுதியது.

சென்னை சர்வகலாசாலைப் பிரசுரம்.

1929

Price, As. 12] [விலை அணா, 12.

சென்னை

ப்ரசாரன் லா ஜர்னல் அச்சுக்கூடம்

மயிலாப்பூர்

# விஷய அட்டவணை.


பகுப்பு. பக்கம்.

i. முன்னுரை.

சமுதாய வாழ்க்கையும் மொழிவளர்ச்சியும்— மொழிகள் இலக்கணவமைதிகளினால் நிலைத்து நிற்பது— இலக்கணவமைதிகள் எளிதில் மாறுதலடையாமை —இலக்கணவிதிகளின் பொருத்தனமை — இலக்கணவமைதிகளே மொழிகளின் சம்பந்தங்காட்டுங் கருவி — திராவிடமொழிகளின் சம்பந்தம். ... 1—3

ii. வினைமுற்றே வாக்கியத்தின் உயிர்நிலை

வாக்கியத்திற்கு வினைமுற்றின் இன்றியமையாமை— பெயர்ச்சொல் மாத்திரமடங்கிய வாசகம் சிலவே —திராவிடமொழிகளின் வினைமுற்றுருவம்—மலையாள வினைமுற்று திணைபாலிடங்களைச் சுட்டா— இப்பிரயோகம் காலத்தால் முந்தியது—மொழி வளர்ச்சியும் அபிவாத்தனவாசக கொள்கையும்— விகுதி வேற்றுமையுருபு முதலிய குறியீடுகள் பிற்காலத்துத்தித்தவை—இவ்வுருபுகள் முழுச்சொற்களின் சிதைவே—இவை வழக்கில் வந்தகாலம்—இலக்கண வரம்பமைத்த காலம்—இயற்கை மொழியும் திணை பாலிடஞ் சுட்டா வினைமுற்றுப் பிரயோகமும். ... 3—5

iii. இயற்கை மொழியும் மலையாளமும்.

திணைபாலிடஞ் சுட்டா வினைமுற்று மலையாளத்தில் மட்டிலும் இயல்வது—இது இயற்கைமொழியினது விசேடம்—தமிழ்மொழியின் இயற்கை நிலை—செந்தமிழும் உலகியல் மொழியும்—செந்தமிழ் உலகியல் மொழிக்குப் பிந்தியது—இதன் மறுதலைக் கொள்கையின் காரணங்கள்—மொழிகளின் சீர்திருத்தக் கிரமம் :—(1) எழுத்து நிலை (11) இலக்கிய நிலை

பகுப்பு. பக்கம்.

(iii) இலக்கண நிலை—தெலுங்கு கன்னட மொழிகளின் உற்பத்தி—மலையாளம் பூர்வகாலத் தமிழின் சிலவமைதிகளை யுடைத்தாயிருப்பது—பாண்டிய நாடு தமிழின் தலைநாடு—சோணாடு செந்தமிழ் நாடெனக் கொள்வார் மதம்—மலைநாடு ஓர் கொடுந்தமிழ் நாடு—மலையாள மொழியின் பிற்கால உற்பத்தி—மலைநாட்டுப் பண்டைத்தமிழ் 'கருந்தமிழ்' என்னும் ஓர் கிராமிய மொழி. ... 5—8

iv. உந்தீற்று வினைச்சொல்லும் பண்டைத்தமிழும்.

மலையாள வினைமுற்றுக்களுக்கு உதாரணம்—'உந்நு' 'உந்து' என்பதன் திரிபே—'உந்து' தமிழில் மாண்டு போயினமை—மலைநாட்டில் 'உந்து' 'உந்நு' ஆகக் காரணம்—பண்டைத்தமிழ்ப் புலவரும் உந்தீற்று வினையும். ... 8—9

v. புறநானூறு.

சங்க நூல்களில் உந்தீற்று வினைப்பிரயோகம் அருகியே வந்துள்ளது—புறநானூற்றின் பழைமை—இதில் 7 புலவர்களால் உந்தீற்று வினை யெடுத்தாளப்பட்டிருப்பது—அப்புலவர்களின் பெயரும் உந்தீற்று வினை வந்துள்ள பாடல்களும். ... 9—11

vi. உரைகாரர் கொள்கை.

புறநானூற்றின் 24-வது பாட்டு—இதில் வரும் உந்தீற்று வினைகளைப் பெயரெச்சமெனக் கொண்டது ... 11—12

vii. பாடபேத ஆராய்ச்சி.

'ஆங்காவுறையுள்' என்பது 'ஆங்கவ்வுறையுள்' என்று நிற்கவேண்டும்—'ஆங்கு' 'ஆங்க' என்னும் இடைச்சொல்லின் பிரயோகம் — திருமுருகாற்றுப்படை யுதாரணம்—கூன் அல்லது தனிச்சொல்லின் பிரயோகம்—அது பொருள் தருவதும் தாராததும் புலவரின் கருத்துப்போக்கைப் பொறுத்திருப்பது—சிலப்பதிகாரம், புறநானூறு, இவற்றினின்றும் மேற்கோள்—சிறுபாணாற்றுப்படை மேற்கோள்—புறநானூற்று

பகுப்பு. பக்கம்.

அடிக்கு உரைகாரர் தரும் பொருள் பொருந்தாமை—அதனினும் சிறந்தபொருள் இதுவெனல். ... 12—16

viii. உரைகாரர் கொள்கை பொருந்தாமை.
புறநானூறு 395-ம் பாடலில் வரும் உந்தீற்றுச்சொல்லை பெயரெச்சமெனக் கொள்ளற்கிடமில்லை—பெயரெச்சத்தையும் அது தழுவும் பெயரையும் இடைச்சொற் பெய்து பிரிப்பது—தொல்காப்பியர் விதி—புறம். 386-ம் பாடலில் வந்துள்ள உந்தீற்றுச் சொற்களின் ஆராய்ச்சி—இப்பாடலினின்றும் பெறப்படும் உண்மைகள்—இதிலவரும் உந்தீற்று வினைகள் பெயரெச்சமாகா. ... 16—20

ix. உந்தீற்று வினைமுற்றின் பிரயோக காலம்.
பண்டைத்தமிழில் உந்தீற்று வினைகள் வினைமுற்றாக வந்திருப்பது — உந்தீற்று வினைமுற்றைப்பற்றித் தொல்காப்பியனார் ஒன்றுங்கூறாமைக்குக் காரணம்—அப்பிரயோகம் தமிழகத்தில் அவர்காலத்து இறந்து போயிற்றென்பது—தொல்காப்பியத்தின் காலம்—இடைச்சங்க காலம் சரித்திரவரையறையுட்பட்டதன்று—இலக்கணகாலம் இலக்கியகாலத்திற்குப் பின் வந்தே அமையும் என்னும் மொழிநூற் சித்தாந்தம்—இடைச்சங்க இலக்கியம் கடல் கோளால் இறந்தொழிந்ததென்னுங் கொள்கை—தமிழின் பெருமை தொல்காப்பியத்தின் பழைமையைப் பொறுத்ததன்று—தொல்காப்பியமும் தற்காலத் தமிழும்—தமிழின் ஆதியிலக்கியங்களாய தொகைநூல்களே தமிழுக்குப் பெருமை யூட்டும்—சரித்திர ஆராய்ச்சிமுறை மெய்யை அடிப்படையாய்க் கொள்ளல் வேண்டும்—கோவூர்கிழார் செய்யுள் தொல்காப்பியத்திற்கு முந்தியது. . . 20—25

x. உந்தீற்றுச் சொற்களும் தொல்காப்பியமும்.
உந்தீற்று வினைமுற்றைப்பற்றித் தொல்காப்பியர் ஒன்றும் கூறாமை—அவ்வினைமுற்றுப் பிரயோகம் தொல்காப்பியர் காலத்தில் இறந்தொழிந்தது—கோவூர்கிழார

பகுப்பு. பக்கம்.

காலத்தில் அது வழக்கிலிருந்தமை—தொல்காப்பியத் திணோர் சூத்திரவாராய்ச்சி — தமிழிலக்கணத்தில் இடைச்சொல்—இடைச்சொற்றொகுதியில் பலவேறு சொற்களைப் பெய்தமைத்திருப்பது—'முழுச்சொல்', 'அரைச்சொல்', 'போலிச்சொல்' இவற்றின் இயல் —'உம்' என்னுமிடைச்சொல்லின் பொருள்—'உம் உந்தாகுமிடனு மாருண்டே' என்னும் சூத்திரம் தொல்காப்பியத்துள்ளே தொடர்பின்றி நிற்றல். ... 25—28

xi. உந்தீற்றுச் சொற்களும் நன்னூலும்.
'உந்து'வைப் பற்றிய பவணந்தி சூத்திரம்—'உந்து'ப் பிரயோகம் செய்யுள் வழக்கெனப் பவணந்தி கொண்டமை—அன்னார் காலத்து அது உலகவழக்கற்றுப் போயினமை. ... 28—30

xii. உந்தீற்றுச் சொற்களும் தமிழிலக்கண நூலாரும்.
மலையாளத்தில் உம்மீற்று வினைப்பிரயோகம்—தமிழில் தன்மையிலும் முன்னிலையிலும் அதன் பிரயோகம்—தமிழிலக்கண நூலாரும் உம்மீற்று வினைகளும்—கு, டு, து, று முதலிய வினைமுற்று விகுதிகளைப்பற்றித் தமிழிலக்கண நூலாரின் மாறுபட்ட கொள்கை. . . 30—32

xiii. உந்தீற்று வினைமுற்றும் மலையாளமும்.
மலையாளவினையில் 'உந்நு' விகுதி—'உந்நு' 'உந்து' என்பதன் மரூஉ—'உந்நு' விகுதியைப்பற்றிய டாக்டர் கால்டுவெல், கேரளபாணினீய ஆசிரியர், இவரது கொள்கை—'மூக்கொலி புணர்நியதி' 'ஓரினப்படை உயிர்நியதி' முதலியன—'ன'கர, 'ந'கர ஒலி வேற்றுமை—'கின்று' திரிந்து 'உந்நு' பிறக்கவில்லை; 'உந்து' திரிந்தே அது பிறந்ததெனல். ... 33—35

xiv. 'உந்து' விகுதியும் ஏனைய திராவிட மொழிகளும்.
தெலுங்கு கன்னட வினைமுற்றுக்களும் உந்து விகுதியும்—'உந்து', ஆங்கு 'உத்து' 'உத்சு' 'உது' வென உருவமாறி நிற்றல்—நிகழ்கால வினையெச்சம் தமிழி

பகுப்பு. பக்கம்.

வில்லை—தெலுங்கு கன்னட நிகழ்கால வினையெச்சத்தில் ‘உந்து’ உருவமாறி வருதல்—திராவிடமொழிகளில் ‘உந்து’ விகுதியின் பல்வேறு மாற்றங்கள். ... 35—38

XV. ‘உந்து’ விகுதியும் பண்டைத்தமிழிலக்கியமும்.
‘உந்து’ பண்டைத்தமிழில் உத, உந், ந் என்ற குறிகளாய் மாறி நிற்பது—அவற்றிற்கு உதாரணம். ... 39—40

XVI. உந்தினின்றெழுந்த பல உருபுகளும் நிகழ்காலமும்.
‘உந்து’ வினைச்சொற்களில் நிகழ்காலம் குறித்தமை—இடைநிலையைப் பற்றிய பவணந்தி சூத்திரத்தின் நோக்கம்—‘உந’ இடைநிலையின் நிகழ்காலப்பொருள்—காலக்கிரமத்தில் இதன் காலப்பொருள் மாறினமை—‘மார’ என்னும் விகுதியைப்பற்றிய ஆராய்ச்சி—‘மின்’ என்னும் விகுதியைப் பற்றிய ஆராய்ச்சி—கு, டு, து, று முதலிய விதிகளைப்பற்றிய இலக்கண நூலார் கொள்கை. ... 40—45

XVII. ‘உந்து’ விகுதியின் உற்பத்தி.
‘உந்து’ உம்மினின்று எழுந்ததெனக்கூறல்—இதில் மொழிநூலாராய்ச்சியாளரின் கொள்கை—துணைவினையின் கூட்டுறவால் வினைச்சொல்லில் விகுதியில் காலங் காட்டினமை—இதற்குப் பண்டை இலக்கிய உதாரணங்கள். ... 45—47

XVIII. ‘உந்து’ விகுதியின் பிறிதொரு உற்பத்தி.
பண்டைத்தமிழ் வினையும் நிகழ்காலமும்—காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி—‘உநத’ விகுதி ஒரு முழுச்சொல்லென்பது ... 47—48

XIX. சில வினைவிகுதி இடைநிலைகளின் பண்டையுருவம்.
டாக்டர் கிரால், குண்டாட்டு முதலியோரின் அபிப்பிராயம்—‘கின்ற’வின் உற்பத்தி—டாக்டர் கிற்றலுடைய அபிப்பிராயம்—முழுச்சொற்களின் துணையால் நிகழ்காலம் அமைத்தனரென்பது. ... 48—51

பகுப்பு. பக்கம்.

**XX.** கோவூர்கிழார் காலம்: அவர் செய்யுளின் சொல் நடையால்.

கோவூர்கிழார் தொல்காப்பியருக்கு முந்தினவரென்பது—தமிழோடு ஆரியம் பலபடியிற் கலந்துள்ளமை—'உந்து' விகுதி வந்துள்ள பாடல்கள் மிகப்பழைமை வாய்ந்தன வென்பது. ... 51—53

**XXI.** கோவூர்கிழார் காலம்: அவர் செய்யுளின் பொருட்போக்கால்.

அவர் செய்யுளில் பழங்கால வழக்க ஒழுக்கங்கள் அமைந்திருக்கின்றன வென்பது—ஒரு நூலின் கால நிர்ணயத்திற்காம் அளவைகள்—இச்செய்யுட்கள் புலனின்பம் துய்க்கும் வாழ்க்கையைக் காட்டுகின்றன வென்பது—புறநானூற்றிலிருந்து உதாரணச் செய்யுட்கள்—புறநானூறு தற்காலம் தொகுக்கப்பட்டிருக்கும் முறை. ... 53—57

**XXII.** கோவூர்கிழார் காலம்: சமகாலத்தவரின் பழைமையால்.

பரணரின் பழைமை—கரிகால சோழன், நலங்கிள்ளி முதலியோரின் காலம்—கோவூர்கிழாரும் நலங்கிள்ளியும்—பரணர் கோவூர்கிழாருக்கு இரண்டு தலைமுறையளவே முந்தினவர். ... 57—58

**XXIII.** முடிவுரை.

தொல்காப்பியத்திற்கு முந்தியே உந்தீற்று வினைப்பிரயோகம் தமிழகத்தில் மாண்டுபோயினமை—தொல்காப்பியம் சங்கவிலக்கியங்களுக்கும் பின்னுதித்த நூலென்பது—ஆற்றுப்படைச் செய்யுளில் வரும் ஓர் வழுவமைக்கவெழுந்த தொல்காப்பிய சூத்திரம்—தொல்காப்பியத்திற்கு முந்திய தனித்தமிழ் இலக்கண நூல்கள்—தொல்காப்பிய சூத்திர மேற்கோள் 58—61

# 'உந்து' என்னும் இடைச் சொற் பிரயோகம்

## அல்லது

# புறநானூற்றின் பழைமை

---

முன்னுரை.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியினையும் அச்சமுதாயத்திடை நிலைபெறும் ஒரு மொழியின் வளர்ச்சியினையும் நாம் ஒப்பிட்டு நோக்கின், இரண்டிலும் ஒருண்மை விளங்கக் காண்போம். அஃது யாதெனின், மக்களுள் ஒவ்வொருவரது தனித்த வாழ்க்கையினும் அவரால் ஆக்கப்படும் சமுதாய வாழ்க்கை எவ்வாறு பெரிதும் நீடித்து நிற்பதாமோ, அவ்வாறே, தனித்தனியே தோன்றி நிலவிச் சிறிதுகாலத்தில் மறைந்துபோகும் சொற்களைக்காட்டினும் அச்சொற்களின் சேர்க்கையாலாய மொழிகள் (Languages) நெடுங்காலம் நின்று நிலவுமென்பதே. இது சான்று தந்து தாபிக்கவேண்டாத ஓர் வெளிப்படையாய உண்மையே யாகும். ஒருமொழி நிலைத்து நிற்பதென்றற்கு அம்மொழியின் சொற்கள் ஒவ்வொன்றும் வழக்கிலியன்று நிலைத்துநிற்க வேண்டுமென்பது அவசியமின்று. அச்சொற்களை ஓர் வாக்கியத்திடைக் கோத்தமைக்க வேண்டப்படும் இலக்கணவமைதிக்குத் தக்க எல்லா உருவங்களும் நியதிகளும் வழக்கில் நெடுங்காலம் கையாளப்பட்டு வரவேண்டுமென்பதே போதியது. சொற்கள் வழக்காறற்று மாண்டு போய்விடலாம்; சொற்களின் உருவங்களும் சிலசமயம் மாற்றமெய்திப் பிறவாறு வந்தமையலாம்; ஆயினும் இச்சொற்களையும் சொல்லுருவங்களையும் வாக்கியத்துட் பிணைக்கும் அடிப்படையாய இலக்கணவமை

திகள் எளிதில் மாறுதலடையா. மொழிகளின் பொருளை விளக்கி நிற்கும் அகராதி, நிகண்டு முதலியவற்றின் சிறப்பு விதிகள் போலாது இலக்கண விதிகளெல்லாம் பொதுத் தன்மை வாய்ந்திருத்தலே இம்மாறுதலடையாமைக்குக் காரணமென்று கூறத்தகும். இப்பொதுவிதிகளும் காலம் நீடித்துச் செல்லச் செல்ல மாறுதலடையக் கூடும்; ஆயினும் அஃது ஓர் சாதாரண நிகழ்ச்சி யன்று. ஒரு மொழியின் இலக்கண அமைதிகளை ஓர் ஆற்றின் இருபக்கமும் அமைந் துள்ள கரைகளோடும் அம்மொழியின் சொற்றொகுதிகளை அவ்வாற்றி னுட்பாயும் நீர்பெருக்கோடும் உவமிக்கலாம். புதிய நீர் மேனின்று பாய்ந்து பரவ, பழைய நீர் கீழே சென்று கழிவதேபோல் ஒரு மொழியின் சொற்றொகுதியும் காலச் செலவில் மாறுதல் அடைந்துபோய்விடும். ஆயினும் ஆற்றின் இருகரை வரம்பினுள் இம்மாற்றங்கள் பல நிகழி னும் ஆற்றின் தடம் எளிதில் மாறாதிருப்பது போன்றே, சொற்றொகுதிகளை ஒன்றோடொன்றிசைப்பதாய இலக்கண நியதியென்னும் அணைகரையின் உறுதியால் பாஷை மாறுத லடையாது நீடித்து நிலவுகின்றது. இதுபற்றியே மொழி கள்தம்முள் ஏற்படும் சம்பந்தத்தை அறிந்து கொள்வதற்குச் சொற்றொகுதியைக்காட்டினும் இலக்கணவமைதியையே தக்க கருவியென்று மொழிநூலார் கருதிக் கையாடி வரு கின்றனர்.

தமிழும் ஏனைய திராவிடமொழிகளான தெலுங்கு, கன் னடம், மலையாளம், துளு, என்பனவும் ஒரு குடும்பத் தைச் சேர்ந்த மொழிகளென்று காட்டுதற்கு அவற்றின் சொற்றொகுதிகளைக் காட்டினும் அவற்றாலியன்ற வாக்கியத் துள்ளே பொதிந்து கிடப்பனவாய இலக்கண அமைதிகளே பெரிதும் உதவி புரிகின்றன. இம்மொழிகள் ஒவ்வொன்றி னுள்ளும் பிற்காலத்துதித்து நடைபெறத் தொடங்கிய ஆயிரக்கணக்கான சொற்களின் திரளை மாத்திரம் கவனிக் கின் இம்மொழிகள் தம்முள் சம்பந்தமுடையனவல்ல வென்று சிலர் ஐயுறவுங்கூடும். மேலோட்டமாக நோக்கு

வரை மருளச்செய்யும் சொல்லாகிய புகைக்காட்டினுள்ளே சென்று கண்ணிழந்தமையால் வந்த ஐயுறவே இது. இவ்வழியை விடுத்து அம்மொழிகள் தாங்கிநிற்கும் இலக்கண வமைதிப் போக்குகளை ஒத்து நோக்கின் அவற்றுட் காணப் படும் விசேட ஒற்றுமையினால் அம்மொழிகளின் நெருங்கிய சம்பந்தம் வெள்ளிடை மலையென எவர்க்கும் புலனாம். மொழிநூலாராய்ச்சியாளர் கையாடும் நெறியும் இதுவே. ஆகையால் பல்வேறு மொழிகளின் சம்பந்தம் அல்லது பிறப் பொற்றுமையினைக் கண்டுகொள்வதற்கு அவற்றின் சொற் ருெகுதிகளைப் பார்க்கினும் இலக்கணவமைதிகளே மிகச் சிறந்த கருவியென நாம் தெளிவுற்றறியக் கிடக்கின்றது.

வினை முற்றே வாக்கியத்தின் உயிர் நிலை.

பலவகைத்தாய இலக்கண அமைதிகளையும் ஒருங்கு வைத்து அவைதம்முள் இயலும் ஏற்றத் தாழ்வுகளைச சிறிது தூக்கி நோக்கத் தொடங்கின், ஒரு வாக்கியத்தில் வரும் வினைமுற்றுச்சொல்லே அவ்வாக்கியத் தின் உயிர்நிலை என்ன நாம் காண்போம். வேறு எச்சொல் வரினும் அல்லது வராது போயினும், ஒரு வாக்கியம் நிகழ வேண்டுமாயின் வினைமுற்றுச்சொல் ஒன்று வந்தே தீர வேண்டும். இது எம்மொழி இலக்கணநூலார்க்கும் ஒபப முடிந்த ஒரு கொள்கையே யாம். ஒரு வினவுக்கு விடை யிறுக்கும் பொழுதோ, அன்றிப் பண்டமாற்றில் விலைகூறும் பொழுதோ, விளிக்கும் பொழுதோ, அல்லது வியப்பு முதலிய வுணர்ச்சிகளை வெளிப்படுத்துரைக்கும் பொழுதோ, ஒரு பெயர்ச்சொல்லை மாத்திரங் கொண்டு ஒரு வாக்கியத் தின் பொருளைக் குறிக்க இயலும். ஆயினும் இங்ஙனம் வரும் வாக்கியங்கள் மிகச்சிலவே. இவற்றை யொழித்துப் பிறவாறு வரும் எண்ணிறந்தவாய வாக்கியங்களையும் வாக் கியத்தொடர்களையும் எடுத்து நோக்கின் அவற்றில் ஒன் றேனும் வினைமுற்றுறுப்பை விடுத்து நிற்பதனைக் காணேம். இதுபற்றியே வினைமுற்றுக்களை வாக்கியத்தின் ஜீவநாடி யெனக்கொண்டனர் மொழிநூலார். திராவிடமொழிகள்

என்னும் வகுப்பைச் சேர்ந்த தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் நான்கு உயர்ந்த மொழிகளில் இவ்வினை முற்றின் உருவம் சிற்சில மாற்றம் அடைந்து காணப்படினும், அவ்வேற்றுமைகளினுள்ளூறச் சாடுபோலோடும் ஓர் ஒற்றுமையும் உளதாய் நிற்பதை நாம் அறிந்துகொள்ளலாம். மலையாள வினைமுற்றுக்களையும் தற்காலவழக்கில் நிகழும் தமிழ் வினைமுற்றுக்களையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து முன்னைய மொழியிற் காலத்தைத் தவிரத் திணை, பால், இடங்களை வினைமுற்றுச்சொல் சுட்டுவதே இல்லை யென்பதனையும் பின்னைய மொழியில் அங்ஙனமன்றித் திணை, பால், இடங்களை அது குறித்தே நிற்குமென்பதனையும் நாம் உணர்வோம். இவ்விருவிதப் பிரயோகங்களிற் காலத்தால் முந்தியது திணை, பால், இடம், சுட்டா வினைமுற்றா அல்லது அவற்றைச் சுட்டும் வினைமுற்றாவென ஆராயின் முன்னையதே முந்தியதென்னும் முடிவுக்கு நாம் வரவேண்டியதாகும். அபிவர்த்தனவாதக்கொள்கைப (Evolution) படியும் மொழி வளர்ச்சிக் கநுகூலமான வேறுபாடுகளெல்லாம் நாளடைவிற்றான் வந்து செறிந்தனவென்று கூறல்வேண்டும். இந்த இயற்கைச சாஸ்திரப் பொதுக்கொள்கைக்கு அநுசரணமாகவேதான் பாஷாசாஸ்திர சித்தாந்தமும் வந்து பொருந்துகின்றது. மொழிகள் தற்காலம் தாங்கி நிற்கும் விகுதி வேற்றுமையுருபு முதலிய குறியீடுகள் யாவும் காலாந்தரத்தில வந்து புகுந்தனவென்பதே மொழிவளர்ச்சிச் சரித்திராசிரியர்கள் கண்டு அறுதியிட்ட முடிபு. தனியே நின்று பொருள் பயவாக் குறியீடாகிய இவ்வுருபுகள் யாவும் தனியே நின்று பொருள் தந்துதவிய மொழிகளின் சிதைவில் வந்த மிச்சமே எனவும் அவர்கள் துணிந்துள்ளார்கள். இயற்கைசசாஸ்திர நியதியையும் பாஷாசரித்திரவுண்மையினையும் கைக்கொண்டு அவற்றின்வழி நோக்கின், திணைபாலிட விகுதிக் குறியீடனைத்தும் வினைமுற்றுச் சொற்களைப் பிற்காலத்திற்றான் வந்தடைந்தனவென்பது போதரும். பன்னெறிப்பட்டு வரம்புணர்தற்கின்றிப் பேச்சு நிலையில் மாத்திரமிருந்த மொழியை

இலக்கண வரம்பு கொடுத்துச் செந்தமிழாக்கின காலத்திற்கும் சிறிது முன்னர் இவை வழங்கிற் புகுந்திருக்கலாம். அக்காலம் யாதேயாயினும், திணைபாலிடக்குறியீடுகள் பெற்றிருந்த வினைமுற்றிலிருந்து காலாந்தரத்தில் அக்குறியீடுகள் விடுக்கப்பட்டு திணைபாலிடங்களுக்குப பொதுவாய வினைமுற்றுக்கள் பின்னுதித்தனவென்று கூறுதல் பொருந்தாது. பேச்சின் சௌகரியம் உத்தேசித்து இவ்வேறுபாடுகளை மலைநாட்டார் விடுத்தொழிந்தனரென்னின், தெலுங்கர்களும் கன்னடர்களும் அச்சௌகரியத்தை ஏன் இதுகாறும் பெற்றுக்கொள்ள முயலவில்லை என்ற வினா எழுமே. இதற்குத் தக்க விடை யிறுத்தலும் எளிதன்று. இதில் நின்று தானே ஒருண்மை விளங்கும். இம்மொழிகளெல்லாம் இலக்கண வரம்பு உதித்த காலத்திற்குச சிறிது முன்னர் இற்றையினும் பரந்துகிடந்த பண்டைத்தமிழுலகத்திற்றோன்றிய பிரசாரமாயினவெனபதே அது. இலக்கணம் உண்டுபண்ணத்தக்க நிலையில் இம்மொழிகளும் தத்தமக்கிசைந்தவாறு வளர்தலுற்று விளங்கின. இவற்றினிலக்கியங்களிலமைந்த மொழியினும் வேறாக வழக்கியல்மொழிகளும் நிலவியிருக்கவேண்டுமென்பது திண்ணம். தற்காலத்திலும் இலக்கியத்தமிழுக்கும் உலக வழக்கில் நடைபெறும் தமிழுக்கும் வேற்றுமைகள் மிக்குளவாதலைக் காண்கின்றோம். இதுபோன்றே இலக்கணநூல்கள் இயற்றபபெற்ற காலத்தில் அந்நூல்கள் விதித்த வரம்புக்கு உட்படாது நின்ற இயற்கைமொழி ஒனறு இருந்திருக்கவே வேண்டுமென்னப போதிய நியாயங்களால் ஊகிக்கலாம். அவ்வியற்கைமொழியில் திணைபாலிடம் சுட்டா வினைமுற்றுப பிரயோகம் நடைபெற்றிருக்க வேண்டுமென்னவும் துணியலாம்.

*அவ்வியற்கை மொழியும் மலையாளமும்.*

இவ்வாறு திணைபாலிடங்களைச் சுட்டாது காலமொன்றனையே சுட்டும் வினைமுற்றுபபிரயோகம் திரவிடமொழித் தொகுதியில் மலையாளமொழியில் மட்டிலும் நிலைத்து நிற்பதனை இன்றும் கண்ணுறுகின்றோம். செந்

தமிழ்ப் பிரயோகம் சிதைந்து அவ்விலக்கணவழக்கு மலையாளத்திற் குடிபுகுந்துகொண்டதெனக் கொள்வதினும் மிகப் பூர்விக காலத்து வழங்கிய இயற்கைமொழியின் சில விசேடப்போக்குகளைத் தன்னுள்ளடக்கி நிற்கின்றது மலையாளம் எனக்கொள்வது உண்மையோடு பொருத்தமுடையதாயிருக்கும். இலக்கணவிதிகளைத் தழுவிய மொழியொன்று ஒரு காலத்துத் தூயசெந்தமிழாய் உலகில் நடைபெற்றலவியதென்றும் அது மரூஉவழக்காலும் இழிவழக்காலும் காலாந்தரத்தில் மலினமடைந்து போய்விட்டதென்றும் கொள்வதா? அன்றித் தமிழ் மக்களும் ஏனைய மாந்தர்களைபபோல் எழுத்துநிலை, இலக்கியநிலை, இலக்கணநிலை என்னும் அபிவிருத்தி நெறிகளைத் தம்மொழி அடைவதற்கு முன்னரே அதனை இயற்கை நிலையிற் கைக்கொண்டு வழங்கி வந்தனரென்று கொள்வதா? சுருங்கக்கூறின், செந்தமிழ் சிதைந்து உலகியலமொழி உண்டாயிற்ரு, அன்றி உலகியல் மொழியைத் தெளித்துச செந்தமிழ் உண்டுபண்ணப் பட்டதா வென்பதே நாம் முதலாவது தீர்மானிக்க வேண்டிய விஷயம். இவ்விரண்டனுள் பிற்கூறியவாறு நிகழ்லாயிற்றென்பதே மொழிநூலாரின் முடிபு. யுக்திக்குப் பொருத்தமாயதும் இதுவே. இதனை விடுத்துப பண்டைக் காலத்தில் தமிழுலகில நடைபெற்றலவியது செந்தமிழென்றும் அது காலப்போக்கிற் சிதைவடைந்து போயிற்றென்றும் கூறுவது சரித்திரவுண்மைக்கும் யுக்திக்கும் மாருய ஓர் மதமாம். ஆதியில் மொழிக்குத் தெய்விகவுற்பத்தி கற்பித்ததும் பின்னர் இலக்கணம் தோன்றியவிடத்து அதன்பாற் பேரபிமானம் பூண்டதுமே மேற்காட்டிய மதத்தைத் தாங்கி நிற்கும் அடித்தூணங்களாய்ச் சமைந்தனவென்று கூறலாம். ஒரு மொழியின் சீர்திருத்தம் தான் காலக்கிரமத்தில் மூன்றுபடித்தாய் நிகழ்வதாகும். பேச்சளவில் நிகழ்கின்ற மொழி எழுத்துநிலை அடைந்துழி ஓர் சீர் திருத்தம் பெறுகின்றது; எழுத்து நிலையைக் கடந்து இலக்கிய நிலை பெற்றுழி அதனினும் வேருயவோர் சீர்திருத்தம்

அடைகின்றது; இலக்கியநிலையினின்று இலக்கண நிலை செறிய ஆங்கும் ஓர் திருத்தம் ஏற்படுகின்றது. இவ்வாறாயப் பல்வேறு திருத்தங்களையும் பெறுவதற்குமுன் மொழி நின்ற நிலை இயற்கைநிலையே. அதனை இலக்கண நியதிகளில் நின்றும் கோடிய நிலையெனக் கொள்ளுதல் பெருந்தவறு. செந்தமிழ்க் காலத்திற்கும் முன்னே நடைபெற்றிருந்த இயற்கைத்தமிழின் சிற்சில உருவங்களே மலையாளமொழியில் இன்றும் நிலைத்து நிற்கின்றனவென்று கூறலே பொருத்தமாவது. தமிழகத்தின் வடவெல்லைக்கண் வழங்கும் தற்காலத் தெலுங்கும் கன்னடமும் தமிழர் பிறரோடு ஊடாடிக் கலபபுற்றமையாற்றிரிந்து பிறந்த மொழிகளென்ன அநுமானிக்கத்தக்க நியாயமுண்டு. மலைநாட்டிற்கு அவ்வாறு பிறமக்களோடு கலப்புறத்தக்க ஊடாட்டம் நாம் குறிபபிடுங் காலத்தில் ஏற்பட வசதியொன்றுமே இல்லை. இது பற்றியே பூர்வகாலத்தமிழின் அமைதிகள் சிலவும் தமிழ்மக்களின் பண்டை வழக்க ஒழுக்கங்கள சிலவும் மலைநாட்டில் இன்றும் இறவாது நிலவுகின்றன. இலக்கணநூல் வகுத்துச் செந்தமிழ் தெளிக்கப புக்க காலத்தில் தமிழரிற் பெரும்பாலரும் பாண்டிய நாட்டில மிக்குக் குழுமி வசித்தனராதலினாலே அந்நாட்டையே தமிழ்மொழிக்குச் சிறந்துரிய தலைநாடாக அக்காலத்துக் கொண்டனர். அதனைச் சுற்றிக்கிடந்த மற்றெலலா நாடுகளையும் கொடுந்தமிழ் நாடாகவும் கருதினர். இதனினும் சிறிது வேறுபட்டுச் சோணாட்டைச செந்தமிழ் நாடெனக் கொண்டாரும் பிற்காலத்திற் சிலருண்டு. 'கொடுந்தமிழ்' என்பது 'இயற்கைத்தமிழ்', 'பழந்தமிழ்' அல்லது 'மக்களிடைச் சாதாரணமாய் வழங்கி வந்த தமிழ்' எனக் கொளளின் மலைநாட்டின் பெரும்பாகத்தையும் கொடுந்தமிழ் நாடெனத் தமிழ் இலக்கணநூலார் கொண்டது நியாயநெறிக்கு உடன்பாடேயாம். இங்ஙனமாகப் பண்டைக்காலத்தமிழின் சிற்சில உருவங்களைச் சேமித்து வைத்துக்கொண்டிருக்கும் மலையாள மொழியில் இன்றும் நிலவுவதான 'உந்து' என்ற வினைமுற்று விகுதி

யின் வரலாற்றைச் சிறிது ஆராயின் தமிழ்மொழியின் பூர்விக மொழிவழக் கொன்றினை இதன்மூலம் நாம் கண்டுகொள்ளு தற்கேதுவாகும். சங்ககாலத்தில் தமிழின் வேறாய மலையாள மொழி யொன்றில்லாதிருக்கவும் பிற்காலத்துதித்து நிலவுவ தான அம்மலையாள மொழியிலிருந்து பண்டைத்தமிழ் வழக் காறு எங்ஙனம் பெறுதலமையுமென்று சிலா இங்கு ஐயுற லாம். மலையாளம் ஒரு தனிமொழியாய்ப பரிணமித்துத் தோன்றியது தமிழ்ச்சங்க காலத்திற்குப பின்னரே யெனி னும் அக்காலத்தில் மலைநாட்டு மக்களிடை வழங்கிவந்த தமி ழுக்கும் அக்காலத் திலக்கியங்களுள் வந்தமைந்த தமிழுக் கும் மிக்க வேற்றுமை இடைபபட்டிருக்க வேண்டுமென்பது ஒருதலை. அக்காலத்தே மலைநாட்டு மக்களிடை வழங்கிய தமிழைப பிற்பட்டகாலத்தில் மலையாளமொழியின் பிறபபக மாயமைந்த ஓர் கிராமியமொழி (Provincial Dialect) யென மதித்தலே அமைவுடையது. இதனையுணர்ந்தே மலையாள இலக்கண நூலாரும் அம்மூலமொழிவேறுபாட் டைக் 'கருந்தமிழ்' என்னும் பெயராற் சுட்டலாயினர்.

**உந்தீற்று வினைச் சொல்லும் பண் டைத் தமிழும.**

மலையாளமொழியில் திணைபாலிடங்களைச் சுட்டாத வினைமுற்றுப பிரயோகம் இன்னும் நடை பெற்று வருவதை மேலே சுட்டினோம். இதனைப பின்வரும் உதாரணங்களாற் காண்க:—

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| ஞான் செய்யுந்நு | நீ செய்யுந்நு | அவன் செய்யுந்நு |
| ஞங்கள் ,, | நிங்ஙள் ,, | அவள் ,, |
| | | அவர் ,, |
| | | அது ,, |
| | | அவ ,, |

இவற்றுட் பயின்று வரும் 'உந்நு' என்னும் வினைச்சொல் விகுதி 'உந்து' என்பதன் திரிபென்பதே இங்குக் காட்டப் போந்துள்ளது. 'உந்து' என்ற விகுதியோ இக்காலத்துத்

தமிழில் வழக்காறற்று மாண்டுபோயின ஓர் குறியீடேயாம். உலகவழக்கில் ஒழிந்துபோனதுமன்றி இலக்கிய வழக்கிலும் அது நின்று நிலவக் காணோம். மொழிவளர்ச்சிபபோக்கை ஆராய்வார்க்கு இஃது ஒருபொழுதும் வியபபினையூட்டாது. நாளடைவிற்றோன்றி நடைபெற்றுப் பின் மறைந்தொழிகின்ற எத்துணையோ சொற்பிரயோகங்களில் இதுவும் ஒன்றெனக் கணித்தமைவர். தற்கால வழக்கில் இப்பதம் இறந்துவிட்டதேயாயினும் பண்டைக் காலத்திலே தமிழ் மொழிக்கண் அஃது எங்ஙனம் கையாடப்பட்டு வந்ததென அறிந்துகொள்ளத் தமிழறிஞர்களெலலோரும் கடமை பூண்டுள்ளார்கள். மலையாள மொழியில் நிகழ்கால வினைமுற்றைச்சுட்டும் 'உந்து' என்ற விகுதி தமிழில் 'உந்து' என்ற உருவத்திற்றான் இருத்தல்கூடும். மெலலின எழுத்துக்கள் மூக்கின் வளியாற் பிறக்கும் இயல்பினவாதலினால் மூக்கினொலியைத் தமிழர்களினும் மிக்குக் கையபற்றிய மலையாளநாட்டாரிடை 'உந்து' என்பது 'உந்து' என மருவாமலிருந்திருக்குமேல் அது நமக்கோா ஆசசரியத்தைத் தருவதாகும். திரவிட மூலபாஷை யென்றோ அல்லது அம்மூலபாஷையோடு நெருங்கிய சம்பந்தமுடைய பாஷையென்றோ ஒபபுக்கொள்ளபபடும் தமிழிலும் உயர்தரப்புலவர் வழக்கில இவ் 'உந்து' என்பது காணபபெறின், தற்காலத்தே தமிழ்சிதைந்தெழுந்த மொழியெனக் கருதபபடும் மலையாளமொழியின்கணுள்ள 'உந்து' பண்டைத் தமிழ்வழங்கோடு ஒற்றுமைபபட்டு இவ்விரு மொழிகளையும் பிரிக்கும் மலைத்தொடரை ஊடுருவிச சென்று அவற்றை இணைக்கும் ஒரு சுரங்கவழியாய் அமைவதனை நாம் கண்ணுற்றவராவோம். அதனால் இம்மொழி வழக்கை நுணுகி ஆராய்வது மிகவும் அவசியம்.

'உந்து' என்னும் விகுதியின் பண்டை வழக்காற்றை ஆராயப்புகின் தமிழ் மொழியிற் சங்க நூலெனப்படும் ஆதியிலக்கியங்களாய பத்துப்பாட்டு, எட்டுத்தோகை முதலிய

புறநானூறு.

தொகைநூல்களிலும் இதன் பிரயோகம் அருகியே யுள்ள தென்பது காணலாம். எல்லாப்புலவர்களாலும் எடுத்தாளப்படாது போயினும் சிலர்தாமும் இதனை எடுத்தாண்டிருப்பதே திரவிடமொழிநூலாராய்ச்சியாளர்க்கு ஒரு புதுவழியைத் திறந்து காட்டாநிற்கும். **எட்டுத்தொகை** நூல்களுள் பழமையில் தலைநின்று விளங்குவது **புறநானூறு.** இதிலடங்கிய 400 பாடல்களும் பல புலவர்களாற் பல காலத்துப் பாடப்பட்டனவாம். இந்நூலகத்தே 7 புலவர்களால 10 பாடல்களில் இவ்வுந்தீற்று வினைகள் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் அகப்படாத ஒருபாடலிலும் இப்பிரயோகம் பயின்றுவந்திருப்பதனையும் காணலாம். அவ்வேழு புலவர்களின் பெயரும் அவர்களாற் பாடப்பட்டோர் பெயரும் பாடல்களின் எண்ணும் இங்குக் குறிப்பிடுகின்றேன்.

| புலவர். | பாடப்பட்டோர். | பாடலெண். |
|---|---|---|
| 1. மாங்குடிகிழார் | தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். | 24 |
| ௸ | வாட்டாற் றெழினியாதன். | 396 |
| 2. ஒரு சிறைப் பெரியனார் | நாஞ்சில் வள்ளுவன். | 137 |
| 3. பரணர் | ,, | 343 |
| ௸ | ,, | 352 |
| 4. கருவூர்க்[1] கதப்பிள்ளை | ,, | 380 |
| 5. புறத்திணை நன்னாகனார் | கரும்பனூர்கிழான். | 384 |

1. இப்பெயர் 'கந்தப்பிள்ளை' என்றிருக்கலாமென் றூகிக்க இடமுண்டு.

| புலவர். | பாடப்பட்டோர். | பாடலெண். |
|---|---|---|
| 6. கோவூர் கிழார் | சோழன் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளி வளவன். | 386 |
| ஷை | சோழன் நலங்கிள்ளி. | 400 |
| 7. மதுரை நக்கீரர் | சோழநாட்டுப் பிட வூர் கிழான்மகன் பெருஞ் சாத்தன். | 395 |
| புலவர் பெயரில்லை | ,, | 339 |

இவற்றுள் சிதைவின்றிப பூர்த்தியாகக் கிடைத்துள்ள பாடல்கள் மூன்றே. அவையாவன 24, 137, 386. எஞ்சிய எட்டுப்பாடலகளும் இடையிடையே அடிகள் சிதைந்துள் ளனவேயாயினும் பெரும்பாலன உந்தீற்றுச சொல்லின் பிரயோகத்தை நிச்சயிக்க ஒருவழி உதவுவனவேயாம். 352-ம் செய்யுளும் 400-ம் செய்யுளும் அறவே இவ்வா ராய்ச்சிக்குப் பயன்படாது நிற்கின்றன.

**உரைகாரர் கொள்கை.**

இபபாட்டற் றொகையில இரண்டு பாடல்களுக்கே பண்டையுரையாசிரியர் உரைவரைந்துள் ளார். அவற்றின் எண் 24, 137. அவற் றில வரும் உந்தீற்றச் சொற்களே அவா பெயரெச்சமெனக் கொண்டனர்.

புறம் 24 :—

“ நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின் முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து,
திண்டிமில் வன்பரதவர்
வெபபுடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து,
தூவற்கலித்த தேம்பாய்புன்னை
மெல்லிணர்க்கண்ணி மிலைந்தமைந்த
ரெல்வளைமகளிர் தலைக்கைதரூஉந்து,

10. வண்டுபடமலர்ந்த தண்ணறுங்கானன்
முண்டகக்கோதை யொண்டொடிமகளி
ரிரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறு
மோங்குமணற் குவவுத்தாழைத்
15. தீநீரோ டுடன் விராஅய்
முந்நீருண்டு முந்நீர்ப்பாயுந்
தாங்காவுறையு ணலலூர் கெழீஇய
வோம்பா வீகை மாவே ளெவ்வி
19. புனலம் புதவின் மிழலை யொடு

* * *

இதில் 'பாயுந்து' 'தூங்குந்து' 'தரூஉந்து' என்னும் பெயரெச்சங்கள் மூன்றும் 19-ம் அடியில் வரும் 'மிழலை' யென்னும் பெயரைக்கொண்டு முடிந்தனவென்றனர்.

பாடபேத ஆராய்ச்சி.

16-ம் அடியீற்றில் வரும் 'பாயும்' என்ற சொலலுக்குப் பதிலாக 'பாயுந்து' என்ற பாடபேதமும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இப பாடபேதத்தினைக் கைக்கொள்ளின் 17-ம் அடியின் முதற்சீரகள் 'ஆங்காவுறையுள்' என்றே நிற்கும். இங்ஙனம் வருதல் கொள்ளத்தக்கதன்று. 'ஆங்கவ்வுறையுள்' என நிற்பின் 'அங்ஙனம் உறைதலையுடைய ஊர்' எனப பொருளபட்டு முற்கூறிய செயல பலவற்றையும் சுட்டக்கூடும்.

"முந்நீருண்டு முந்நீர்பபாயுந்
தாங்கவ் வுறையுணலலூர் கெழீஇய"

என்பதன்கண் இரண்டாமடியில் வரும் வகரவொற்றினையே காலெனமயங்கி ஏடெழுதினாரிற் சிலர் 'தாங்கவ' என்பதனைத் 'தாங்கா' வெனத் திரித்திருக்கலாமென ஊகிக்கவும் இடமுண்டு.

பலவாக்கியங்களில் அடுக்கிவரும் வினைமுற்றுக்களைப் பின்வாக்கியத்தோடிசைப்பதற்குச் சில புலவர்கள் 'ஆங்கு' அல்லது 'ஆங்க' என்னும் இடைச்சொற் பிரயோகித்

திருப்பதனைப் பரக்கக் காணலாம். சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு இவற்றை விட்டு வேறு இடைச்சொற்களையோ பிறசொற்களையோ சிலர் உபயோகித்துமிருக்கின்றனர். நக்கீரர் இயற்றிய **திருமுருகாற்றுப்படை**யில் வருவனவற்றை நோக்குக.

(1) முருகவேளுடைய ஆறுமுகங்களின் செயலையும் வெவ்வேறு முற்றுவினைகளாற் குறித்துவிட்டு அவற்றை ஒருங்கு திரட்டக் கீழ்வரும் அடிகளைத் தருகின்றனர்.

"* * * ஒருமுகங்
குறவர் மடமகள கொடிபோ னுசுப்பின்
மடவரல வள்ளியொடு நகையமர்ந் தன்றே
யாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்".

(2) இதுவேபோன்று அப்பெருமானுடைய கைகளின் தொழில்களைத் தனித்தனி தந்து அவற்றையும் ஒருங்கு சேர்த்துக் கூறும் முறை இங்குக் கவனிக்கத்தக்கது.

"* * * ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி"

இவற்றில நின்றும் வினைமுற்றுக்கொண்ட வாக்கியங்களைத் தொகுத்துப பின்வாக்கியத்தோடிணைபபதற்கு 'ஆங்கு' என்னுஞ்சொல் உபயோகபபடுத்தபபட்டதென நன்கறியலாகும். ஆயினும், காட்டிய இரண்டு பிரயோகங்களினும் அம்மொழி 'கூன்' அல்லது தனிச்சொலலாய் வந்திருத்தலின் ஆங்கென்னுஞ்சொல அடியினுறுப்பசையா யமைந்த முன்குறித்த **புறநானூற்றின்** அடிக்கு இம்மேற்கோள் பொருந்துவதாமோவெனச் சிலர் ஐயுறலாம். இலக்கிய வழக்கைச் சிறிது ஆராயுமிடத்துக் கூனுய்வரும் தனிச்சொல்* பொருள்தந்து நிற்பதனையும் அடியுறுபபாய்

* இதனை 'உரையசை' யென்றுங் கூறுவர்.

அமைந்துவருவன பொருள்பயவாமல் கேவலம் அசையாய் நிற்பதனையும் காணலாம். ஒருசெய்யுளின் அளவு முற்றிய அடியின் உள்ளுறுப்பாய் ஒருசொல் வந்தமைவதும் அஃதன்றிப புறத்துத் தனியே நிற்பதும் அச்செய்யுளியற்றிய புலவரின் கருத்தின் போக்கையும் அதனோடொழுகும் செய்யுள் நடையினையும் பொறுத்திருப்பனவேயாம். இவ்விரு நிலையும் பொருள் கொள்ளுமிடத்து வேற்றுமைதரா. 'ஆங்கு' என்ற சொல் இவ்விருநிலையிலும் பொருள பயந்தும் பொருளின்றியும் நிற்பதைக் காணலாம்.

சிலப் : மங்கலவாழ்த்துப்பாடல்.

"ஓங்கிப பரந்தொழுகலான்
ஆங்கு
பொதியிலாயினு மிமய மாயினும்"

இவ்விடத்தே 'ஆங்கு' கூறாய் நின்றும் 'ஆதலால்' என்னும்பொருளைத் தந்தது.

புறம். 2 :

"தீமுரணிய நீருமென்றாங்
கைம்பெரும் பூதம் ... ... ..."

இதில் 'ஆங்கு' அடியினுறுபபசையாய் அமைந்து நின்றும் பொருள்தரக் காண்கிலோம். இதனால 'ஆங்கு' என்னுஞ்சொல் தனிச்சொலலாய் நிற்பினும் அடியினுள்ளுறுபபாய் அமையினும் பொருள் தந்தும் தராதும் வரலாமென்றறியலாகும். கீழே காட்டிய புறம். 395-ம் பாடலை நோக்க முன் குறிப்பிட்ட பாடபேதம் ஒருவாறு உறுதி பெறுகின்றது.

"அகலள்ளற் புள்ளிரீஇயுந்து
வாங்கப், பல நல்ல புலனணியுஞ்
சீர்சான்ற ... ... ..."

வினைமுற்றுக்களைச் சேர்க்கும் 'ஆங்கு' என்ற அசைச் சொல்லின் பிரயோகம் புறம். 6-லும் 239-லும் வந்திருக்கின்றது. 'ஆங்கு' என்னும் அசைப்புச் சொல்லின்றியும்

வினைமுற்று வாக்கியங்களைப் பண்டைப்புலவர் வேறுவழி யினும் தொடுத்துள்ளாரென்பது புறம். 343-ம் பாடலால் விளங்கும்.

> " கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
> மலைத்தாரமுங் கடற்றாரமும் ... ..."

இங்கு முற்கூறிய பொருள்களை 'மலைத்தாரம்' 'கடற்றாரம்' என்னுமிரண்டு பொதுமொழிகளாற் சுட்டி வாக்கியங்களை இசைத்திருக்கின்றனர். 'அதான்று'[1] 'அதனால்'[2] முதலிய வேறு சொற்களினாலும் சந்தர்ப்பம் நோக்கி இணைத்திருக்கின்றனர். இவ்வாறு பின்வாக்கியங்களோடு சேர்க்கப்படாமலே முன் வாக்கியங்கள் வருமென்பதனையும்

> " தீங்கரைவைக் கொளைத்தாங்குந்து
> உள்ளிலோர்க்கு வலியாகுவன்"

என்ற புறம். 396-ம் பாடலடிகள் நன்றாக விளக்கும்.

புறம். 10, 18, 27 முதலிய பாடல்களும் இதனைத் தக்கவாறு தெளிவுறுத்தும். சிறுபாணாற்றுப்படையில் வந்துள்ள

> " கவைத்தாளலவன் கலவையொடு பெறுகுவி
> ரெரிமறிந்தன்ன நாவினிலங் கெயிற்றுக்
> ... ... ... சாறயர் மூதூர்
> சேய்த்துமன்று சிறிது நணியதுவே "

என்ற அடிகளும் இதனைக்காட்டும்.

நல்லிசைபபுலவர் செய்யுட்களில் வினைமுடிவு செய்வது மாட்டுறுப்பானும் எச்சவுறுப்பானும் ஆமெனத் தொல்காப்பியனார் செய்யுளியலிற் கூறியிருப்பதைக் கவனிக்கின் எடுத்துக்காட்டிய இப் பிரயோகங்களைத் தவறெனத் தள்ளவியலாது. இது நிற்க.

---

1. சிறுபாணாற்றுப்படை 50, 67, 83.
2. மலைபடுகடாம் 557.
   புறம். 28.

"தாங்காவுறையு ணல்லூர் கெழீஇய" என்றெடுத்த பாடத்திற்குப் பண்டையுரையாசிரியர் "பரிக்க வொண்ணாத பலமக்களும் வாழ்தலை யுடைய நல்ல ஊர்கள் பொருந்திய" என்று பொருள் கொள்ளவேண்டியதாயிற்று. 'பரிக்கவொண்ணாத பலமக்களும் வாழ்தல்' என்ற தொடர் விளங்கியபொருள்தரக் காண்கிலோம். இதனை நிலைநிறுத்துவான்வேண்டி யாதாமொரு பொருளை வலிந்து கொள்ளவேண்டுமே யன்றி எளிதில் ஒரு தெள்ளிய பொருள் அத்தொடரிலெழக் காணேம்.

இதனை விடுத்து, "ஆங்கவ்வுறையுணல்லூர்கெழீஇய" என்ற பாடத்தைக் கொள்ளின் 'முற்கூறிய வண்ணம் உறைதல் அல்லது வாழ்தலையுடைய நல்லூர்கள் பொருந்திய' என்ற பொருள் தெள்ளிதின் அமைவதாகும்.

எடுத்துக்கொண்ட செய்யுளில் ஓர் அடியின்கண் வந்தேறிய பாடபேதத்தைக் குறித்த அபிப்பிராயம் எவ்வாறு நிற்பினும், அச்செய்யுளிற் பயின்ற உந்தீற்றுச் சொற்கள் பெயரெச்சமாமெனப் பண்டையுரையாசிரியர் கொண்ட அவ்விலக்கணமுடிபை ஏனைய செய்யுட்களிலும் பொருத்தி ஆராயவேண்டியது மிகவும் அவசியம். இவ்வாராய்ச்சிக்கு, புறம். 339, 352, 380, 384, 400 என்ற எண்ணுள்ள செய்யுட்கள் சிதைந்து காணப்படுவனவாதலின் முற்றும் அறுதியிட்டுரைக்கப் பயன்படுவனவல்ல. 343 - லும் 396-லும் வரும் பெயரெச்சங்களை முடிவுசெய்யப் பல அடிகள் கடந்து சென்றே பெயரைக் கொள்ளவேண்டியதிருக்கின்றது. அஃது ஒருவிதம் செல்லுமேயாயினும், 395-ம் பாடலில் வரும் உந்தீற்றுச் சொற்களைப் பெயரெச்சமாகக் கொள்ளற்கு இடமேயில்லை.

**உரைகாரர் கொள்கை பொருந்தாமை**

"மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் குழைச்சூட்டொடு
நெடுவாளைப பல்லுவியற்

பழஞ்சோற்றுப் புகவருந்திப்
புதற்றளவின் பூச்சூடி
* *
* அரியலாருந்து
* *
நீர்க்கோழிக் கூப்பெயர்க்குந்து
* * *
யகலள்ளற் புள்ளிரீஇயுந்து
யாங்கப் பலநல்ல புலனணியுஞ்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண்யானைப் பெறலருந்தித்தன் *
செல்லா நல்லிசை யுறந்தைக்குணது''
* * *

இதில் வந்துள்ள உந்தீற்றுப் பிரயோகங்களைப் பெயரெச்சங்களெனக்கொண்டு அவற்றை முடித்தற்குப் 'புலன்' என்ற பெயரையோ 'உறந்தை' என்ற பெயரையோ எடுத்துக்கொள்ளினும், இடையில் 'ஆங்கு' என்ற அசைச்சொல் வந்து அம்முடிபு பொருந்துவதன்றெனக் காட்டும். பெயரெச்சத்தினையும் அது தழுவும் பெயரினையும் இவ்வாறாக இடைச்சொற் பெய்து பிரித்தல் இயற்கையிற் செல்லும் வாசக அமைப்பொடு சிறிதும் பொருந்துமாறில்லை.

"தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொல் லாயினு மிடைநிலை வரையா''

என்றனர் தொல்காப்பியர். இங்கு இடைநிலையாய் வந்துள்ள அசை "சிவணுங்குறிப்பின'' தாமோ? ஒருகால் அசாதாரணமான இவ்வகை வாக்கியவமைதியும் வரலாமெனக் கொள்ளினும், நமது கோட்பாட்டை அசைவுறுவண்ணம் நிலைநிறுத்துதற்கு 386-ம் புறப்பாட்டு ஒன்றே போதும்.

---

* 'பெறலருந்தித்தன்' என்ற பாடம் சிறந்த பொருள்தரவில்லை. புறம். 80-ம் பாடல் 6-ம் அடியில் வந்ததுபோல் 'போரருந்தித்தன்' என்றேனும் அல்லது 'பொரலருந்தித்தன்' என்றேனும் ஈண்டும் பாடமிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

ஐயுறவின்றிக் குழைக்கப்படும் மனத்திற்கு இஃதோர் கலங்கரை விளக்காக விளங்கிப் பழையதோர் மொழிவழக்காற்றை விசதமாய்க் காட்டிநிற்கின்றது. இப்பாடல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாராட்டிக் கோவூர் கிழார் பாடியது.

“ நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவுஞ்
சூடுகிழித்து வாடூன் மிசையவு
மூன்கொண்ட வெண்மண்டை
யான்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்பபறியாமை
யீத்தோ னெந்தை யிசைதனதாக
வயலே, நெல்லின்வேலி நீடியகரும்பின்
பாத்திப் பன்மலர்ப பூத்ததும்பின
புறவே, புலலருந்து பலலாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று
கடலே, காறந்த கலனெண்ணுவோர்
கானற்புன்னைச் சினைநிலைக்குந்து
கழியே, சிறுவெள்ளுப்பின் கொளளோசாற்றிப்
பெருங்க னன்னாட் டுமெனுலிக்குந்து
அன்ன நன்னாட்டுப பொருநம் யாமே
* * * ”

இப்பாடலை ஆராயின் கீழேதரப்படும் உண்மைகள் வெளியாம் :—

(i) ‘நிலைக்குந்து’ ‘ஒலிக்குந்து’ என்னும் வினைச்சொற்கள் மேலையடிகளில் நிற்கும் ‘ததும்பின’ ‘குறும்பின்று’ என்பவற்றைப்போல வினைமுற்றுச் சொற்களேயாய் அமைந்தன வென்பது.

(ii) மேற்கூறிய நான்கு வினைமுற்றுக்களையும் ‘அன்ன’ என்னும் இடைச்சொல் பின்வரும் வாக்கியத்தோடிசைத்

துப் புறம். 395, 24-ஆம், பாடல்களோடு இப்பாடலையும் வாசக அமைப்பில் ஒற்றுமைப்படுத்துகின்றதென்பது.

(iii) உந்தீற்றுச் சொற்களைப் பெயரெச்சங்களெனக் கொள்ளின் அவை கொண்டுமுடியவேண்டும் 'கடல்', 'கழி' என்பன அவற்றிற்கு முன்னின்று எச்சமல்ல வென்னுங் கருத்தை நிலைநாட்டுகின்றதென்பது.

உந்தீற்றுச் சொற்களைப் பெயரெச்சமாய்க் கோடற்கு இச்செய்யுள் இடந்தரவில்லை. வாக்கியங்களின் அமைப்பினாலும் பொருள் செல்லும் நேர்மையாலும் அவற்றை வினைமுற்றாகக் கோடலே தக்கது. சிலவேளை செம்மையாக நேர்பட்டுச்செல்லும் வாக்கியங்களை அலைத்துத் திரித்து வேண்டும் பொருள் பெறவைத்தற்கென ஏற்பட்டுள்ள சில விசேடப் பொருள்கோள்முறைகளைக் கையாடின் இவற்றைப பெயரெச்சமெனவும் சாதிக்கலாம்! 'ஒலிக்குந்து கழி' 'நிலைக்குந்து கடல்' 'பூத்ததும்பின வயல்' எனக்கொள்ளினும் 'குறும்பின்று புறவு' என்பது பெயரெச்சத்தொடராய் வர ஒருவழியும் காணேம்.

இதனினும் வேறாக ஈற்றடிக்கண் வந்த 'நன்னாடு' என்னும் பெயரைக்கொண்டு 'நிலைக்குந்து' முதலிய பெயரெச்சங்கள் முடிந்தனவெனக் கூறின், அஃதும் பொருந்துமாறில்லை. அப பொருள்கோள்முறையிலும் 'குறும்பின்று நன்னாடு' என்பது பெயரெச்சத்தொடராய் வாராது. இனியும், 'நன்னாடு' என்னும் பெயர்ச்சொற்குமேல் 'அன்ன' என்னும் இடைச்சொல்லொன்று பெய்து நிறுத்தி, மேலேதரப்பட்ட வாசகங்களிற் கூறிமுடிந்தனவற்றைப பின்னரும் புலவர் சுட்டியுள்ளாரென்பது வெளிப்படை. 'ஈத்தோனெந்தை யிசைதனதாக' 'அன்ன நன்னாட்டுப் பொருநம் யாமே' என்னுமிரண்டடிகளினிடையில் வந்துள்ள வாசகங்கள் நான்கினும் 'வயலே' 'புறவே' 'கடலே' 'கழியே' என்று வரும் மொழிகளினீற்றில் எண்ணேகாரம் தந்து அவற்றைத் தத்தமக்காம் வினைமுற்றுக்களை அவாய் நிற்குமாறு நிரல்படக் கோத்தமைத்திருக்

குந் தன்மையே அம்மொழிகள் வினைமுற்றுக்கொண்ட வாசகங்களால் தொடர்பபெற்றிருக்கின்றன வெனக்காட்டும். உந்தீற்று வினைச்சொற்களைப பெயரெச்சமெனக் கொள்வாரது மத மநுசரிதது இவ்வாசகங்களினமைபபை நோக்கின், 'வயலே' 'புறவே' எனத்தொடங்கிய இரண்டு வாசகங்களை முற்றுவினை கொள்ளும் வண்ணம் தொடுததுப பின்னர்க் 'கடலே' 'கழியே' எனத்தொடங்கும் வாசகங்கள் வந்துழிப புலவா எசசவினையைக் கையாடின ரென்று கூறல் வேண்டும். அது எத்துணை பொருந்தும்?

வாக்கியங்களின் இயற்கை யமைபபையும் இயற்கைப பொருள்கோண்முறையையுந் தள்ளிவிட்டு இயற்கையின் மாறுபட்ட முடிபுகளைக் கொள்ளுவதனாலே செய்யுட் கருத்துக்களைப பிழைபட வுணர்கின்றோம். அதனாலே அவ்வழிக்கண் இறங்காது நேரிய பொருளதர உந்தீற்றுச சொற்களை வினைமுற்றாகவே இங்குக் கோடலவேண்டும். புறம். 24, 137-ம் பாடல்களைத் தொல்காபபியனார் விதியென ஒன்றைக் கருதி அதன் ஆட்சிக்குட்படுத்தி வலிந்து பொருளகொண்ட பண்டையுரையாசிரியர் அவ்விதியைச சிறிதும் தழுவாது நிற்கும் இபபாடலை எங்ஙனம் திரிபபரோ அறியோம்.

உந்தீற்று வினைமுற்றின் பிரயோக காலம்.

கோவூர்கிழாரின் செய்யுளில நின்றும் பண்டைத் தமிழ் வழக்காற்றில உந்தீற்று வினைசசொற்கள வினைமுற்றாகவே பயின்று வந்திருந்தனவென்று நாம் அறிந்துகொண்டோம். தமிழுக்குப பண்டை இலக்கணவாசிரியராய தொலகாபபியனாரோ உந்தீற்றுப பெயரெசசத்திற்கெனக் கருதத்தக்க சூத்திரம் ஒன்றியற்றினாரேயன்றி உந்தீற்று வினைமுற்றுக்களைபபற்றித் தமது நூலில் யாண்டும் யாதுங் கூறினாரல்லர்.[1] அவர் அங்ஙனம் கூறாது விடுத்தமைக்குக் காரணம் யாதாயிருக்கலாமென ஆராயுமிடத்துக் கீழ்க்

1. உந்தீற்றுவினைச்சொற்களை வினைமுற்றென எங்ஙனம் தொல்காப்பியனார் கொள்ளவில்லையோ அங்ஙனமே அவற்றைப் பெயரெச்சமெனவும் அவர் கூறினாரல்லரெனச் சிலர் கூறலாம்.

காட்டிய முடிவுகளில் ஒன்றனை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அவையாவன :—

(i) தொல்காப்பியர் காலத்தில் உந்தீற்று வினைமுற்று இல்லாதிருந்து பிற்காலத்துதித்திருக்கலாம்.

(ii) அவரது காலத்திலேயே இப்பிரயோகமிருந்து அதனை இழிவழக்காகக் கருதி அன்னார் ஒழித்திருக்கலாம்.

(iii) பண்டைக்காலத்து நின்று நிலவி தொல்காப்பியர் காலத்து அவ்வுந்தீற்று வினைமுற்று வழக்காறற்றுப்போயிருக்கலாம்.

தொல்காப்பியத்துள் உந்தீற்று வினைமுற்றுக்கள் சுட்டப்படாமைக்கு மேற்காட்டிய மூன்று காரணங்களில் யாதேனும் ஒன்றைக் கற்பிக்கலாம். இவற்றுள் உண்மைக் காரணம் எதுவெனக்கண்டு துணிவதே இனி நம்மேற் போந்த கடமையாகும். முற்காட்டப்பட்ட இரண்டு காரணங்களும் இங்குப் பொருந்துவனவல்ல வென்பது வெளிப்படை. பரணர்முதலிய புலவர்களை பிற்காலத்தாரென வலிந்து கொள்ளினும் (சங்கப்புலவர்களில் இவர் முற்பட்டாரென்பது தேற்றம்) அவர்கள் ஆண்டுள்ள இவ்வழக்குப் பிற்கால இலக்கியங்களில் எங்கேனும் புகுந்து நிற்கக் காண்கின்றோமா? பிற்கால இலக்கண நூல்களிலும் அது குறிக்கப்படவில்லையே. சங்க இலக்கியங்களிலுங்கூட இவ்வழக்கு அருகிக்கிடக்குமெனின் அதனைப் பிற்கால வழக்கெனக் கோடலெங்ஙனம்? கோவூர்கிழார், நக்கீரர், பரணர் முதலிய நல்லிசைப்புலவர்கள் செய்யுட்களிலும

தொல்காப்பியனார் தமது இலக்கணத்தில் உந்தீற்று வினைச்சொல்லின் பிரயோகத்தைக்குறித்து வெளிப்படையாக யாதொன்றும் கூறாதுபோயினமையே அவர்காலத்தில் தமிழகத்தில் அப்பிரயோகம் இறந்தொழிந்ததனை நன்கு வலியுறுத்தும். தொல்காப்பிய உரையாசிரியர்களாய சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், புறநானூற்றுப் பண்டையுரையாசிரியரும் உந்தீற்று வினைச்சொற்களைப் பெயரெச்சமெனக் கொண்டிருக்க, தொல்காப்பியர் அவற்றை வினைமுற்றாகக் கணித்துள்ளாரொன்று துணிந்துசொல்ல இடமில்லை.

இப்பிரயோகம் ஏறிக்கிடப்பதைக் காணின் அதனை இழி வழக்கென யார்தாம் புறக்கணிப்பர்? மலைநாட்டோடு பிற்கால அரசியற் குழப்பத்திற் சேர்ந்துபோன நாஞ்சி னாட்டு வள்ளுவனைப் பாராட்டிக் கவிபுனைந்த ஒருசிறைப் பெரியனாரை மலைநாட்டு வழக்காற் பீடிக்கப்பட்டவரென ஒருகால் ஒதுக்கினும், செந்தமிழ்த் தலைநாடாய மதுரை யில் வாழ்ந்த நக்கீரரை அங்ஙனம் ஒதுக்க வழியுளதோ? செய்யுட் குற்றம் ஆராய்வதில் 'இசையாற்றிசை போய' நக்கீரரே இவ்வுந்தீற்றுக்களைக் கையாடியுள்ளாரெனின் இதனை இழிவழக்கெனத் தள்ளல் ஏற்கத்தக்கதோ? இவ்வா றாய பல இடர்ப்பாடுகள் நிகழ்தல்பற்றி முன்னைய இரண்டு காரணங்களும் இங்கே பொருந்தாவென்றே கொள்ளவேண் டும். அதுபற்றித் **தொல்காப்பியம்** இயற்றப்பட்ட காலத் திற்கு முன்றானே இவ்வுந்தீற்று வினைமுற்றுப் பிரயோகம் தமிழகத்தில் இறந்துபோய்விட்டதென்ற மூன்றாவது முடி வுக்கே நாம் வரவேண்டியதாகின்றது. **தொல்காப்பியம்** இடைச்சங்கநூலெனக் கூறும் பெரும்பாலாருக்கும் இம் முடிவு அதிசயத்தையும் வருத்தத்தையும் ஊட்டாதிராது. ஆயின், அன்னார்க்கு இந்தச் சந்தாபபத்திற் கூறவேண்டிய தொன்றுளது. பெரும்பாலனவாய ஏனைய தேசங்களில் பழங்கதையும் உண்மைச்சரித்திரமும் அறிவாளர்களால் வேறு வேறு பிரித்துணரப்பட்டுத் தனித்தனியே வைக்கப் பெறுகின்றன. இந்தியாவிலோ, முக்கியமாகத் தமிழக மென்னும் தென்னிந்தியாவிலோ, அவ்வித நிகழ்ச்சி இன் னும் வாராதிருப்பது பெரும் பரிதாபமே. இங்கே பெரும் பாலாரிடையும் பழங்கதையும் சரித்திரமும் விரவிக் குழைத்த புராண உண்மைகளிலேயே நம்பிக்கை நிலைத்து நிற்கக் காண்கின்றோம். இயற்கைச்சாஸ்திர ஆராய்ச்சி யும் இயற்கையுண்மை மதிப்பும் இயற்கை உண்மைகளை ஆராய்ந்து கோடற்குரிய முறையும் ஏற்படாதவரை நாம் புராணம் விரிப்பதில் தலைநின்று விளங்குவோமே தவிர, தார்க்கிக முறைகளை யநுசரித்து ஆராய்ச்சிபுரிந்து இயற்கை

யுண்மைகளைக் கண்டுகொண்டவராகேம். அறிந்தவற்றைக் கொண்டு அறியாதனவற்றை அறிந்துகொள்வதே சாஸ்திர ஒழுங்கிற்கும் யுக்திக்கும் பொருத்தமாய முறை. அதற்கு மாறாக நம்மவரில் அநேகர் அறியாதனவற்றைக்கொண்டு அறிந்தனவற்றையும் அளந்து நீக்கிவிடுவதே நெறி யெனக் கைக்கொண்டொழுகுகின்றனர். இவரது மனப் பான்மையும் முறையும் யாருக்குத்தான் வியப்பையும் விசனத்தையும் தாரா? கடைச்சங்க காலமே திட்டமாக நிர்ணயிக்கப்படாமல் வாதப்பிரதிவாதங்களுக்கிடந்தந்து நிற்கு மெனின் தலைச்சங்க இடைச்சங்க காலங்களைச் சரித்திர வரை யறை செய்யப்பட்ட காலமெனக்கொண்டு மற்றையுண்மை களைப் புறக்கணிக்கத் துணிவது சரியாமா? **அகத்தியம்** முத லிய தலைச்சங்கநூல்களை ஒழித்துத் தமிழில் இப்பொழு துள்ள இலக்கியத் தொகுதிகளுக்கெல்லாம் ஆதியிலக்கண மாக விளங்கும் **தோல்காப்பியம்** தான் இயற்றப்பட்ட காலம் யாதோ? காணபரம்பரைக் கதையன்றி அதனை ஆதி நூலெனக் கொள்ளுதற்கு வேறொரு ஆதாரமுங் கண்டிலம். மொழிநூலின் சித்தாந்தப்படியும் ஓர் இலக்கணநூல அதன் இலக்கியம் தோன்றுமுன்னரே தோன்றி முத னூலாவது இயற்கைவிரோதமாகும். **தோல்காப்பியத்**தின் பழைமை நிலைநாட்டுவான் கங்கணம் கட்டிநிற்பார்தாமும் மேற்கூறிய மொழிநூற் சித்தாந்தத்தைக் கைக்கொண் டொழுகுவார்போலத் **தோல்காப்பியத்**திற்கு ஆதாரமாய் நின்ற இலக்கியங்களெல்லாம் கடல்வாய்ப்பட்டுப்போயின வென்றுகூறத் தலைப்பட்டனர். இக்கூற்றும் உண்மை யாமோ? தலைச்சங்க இடைச்சங்கநூல்களனைத்தும் இருந்த இடம் தெரியாவண்ணம் மறைந்துபோயின வென்றால் **தோல் காப்பிய**மும் **அகத்தியத்**திற் சில சூத்திரங்களும் மாத்திரம் பிற்காலத்தார் கைக்கு எங்ஙனம் எட்டின? இவற்றைத் தரக்கூடிய வழி ஏனைய இலக்கியங்களுக்கில்லாமற் போயது ஓர் அரிய விசேடமே! இடைச்சங்கத்தின் கடைக்காலத்து நிகழ்ந்த கடல்கோளால் அக்காலத்து இலக்கியம் யாவும்

அறவே ஒழிந்துபோகுமேல், **தொல்காப்பியம்** ஒன்றுதானு அக் கடல்கோளின் வாய்ப்படாது தப்பி ஓடிவந்துவிட்டது? என்ன புதுமை! யுக்திக்குச் சிறிதும் பொருத்தமில்லா இக் கொள்கையை வேதவுண்மை யெனக்கொண்டு அறிவினுட் பட்ட சரித்திரவுண்மைகளைப் புல்லியவெனத் தள்ளுதல எம் முறைபற்றியோ? ஒருகால தமிழின் பெருமை **தொல்காப்பியத்தின** பழைமைமேற் கட்டப்பட்டிருக்கின்றதென இவர் எண்ணியிருப்பர் போலும். அங்ஙனமாயின் அம்மயக்க வுணர்ச்சியை அடியோடு மாற்ற இவர் கடமைப்பட்டுள ளார். காலம் செல்லுந்தோறும் புதுபுது மாற்றங்கள் வந்து செறியும் மொழியின் இயல்புகளனைத்தையும் ஒருகாலத் துதித்த ஓர் இலக்கணநூல தாங்கிநிற்றல என்பது முடியக் கூடியதொன்றா? தமிழ்மொழியின் இலக்கணங்களெல்லாம் **தொல்காப்பியத்துள** வரையறை செய்யப்பட்டனவென்று கூறல் மொழிவளாசசிக் கிரமம் அறியார் கூறும் வெற் றுரையேயன்றிப் பிறிதென்? மேலும், **தொல்காப்பியத்** தின் விதிகளிற் பல தற்காலத் தமிழுக்குப் பொருத்தமில வாயின; தொலகாபபியர் நினைத்தறியாப புதுமுறைகளும் புதுவிதிகளும் வந்துபுகுந்தன. இவ்விதமிருக்கத் தமிழின் பெருமை யெல்லாம் **தொல்காப்பியததில** நின்றெழுந்த தென்றுகோடல சரித்திரவுண்மைகளைக் கண்டுகொள்ளா வாறு கண்ணை இறுக மூடிக்கொள்ளும் குருட்டுச் சித்தாந்த மேயாகும். அதனால், **தொல்காப்பியப** பழைமைக்கு வேண் டிப் பெரிதும் மன்றாடவேண்டியவோர் அவசியமே இன்று. இந்நூலின் பழைமையின்றியே தமிழின் ஆதியிலக்கியங்க ளாய சங்கநூற் றொகுதியின் பழைமையை தக்கவாறு நிறுவ இயலுமென்பதே எமது துணிபு. இஃதன்றியும், நம்ம வரின் 'பெருமை' 'சிறுமை'களை உத்தேசித்து சரித்திர ஆராய்ச்சி நிகழ்த்துவதெனின் உண்மைகளை உள்ளவாறு கண்டுகொள்ளத்தான் இயலுமா? நமது அபிமானக்காட்டி னுட்புகுவதென்றால் அது உண்மை சென்றடையும் மேலாய நெறியைக் கைவிட்டுப் பொய்யாம் படுகுழிக்கண் வீழ்ந்து

"இருட்டு வீட்டிற் குருட்டானை" பட்ட கதையாய் முடிந்துவிடுமே! ஆதலால் மெய்யை அடிப்படையாய்க் கொண்ட பெருமையே பெருமை; மற்றைய யாவும் போலி யெனவுணர்ந்து ஆராய்ச்சியை நிகழ்த்த அத்துறையில் இறங்கிய அனைவரும் கடமை பூண்டுள்ளார்.

மேற்காட்டிய உந்தீற்று வினைமுற்றின் பிரயோகம் தூண்டும் வழியே சென்றால், தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்திற்கு முன்றானே கோவூர்கிழாரின் செய்யுள் இயற்றப் பட்டிருக்கவேண்டுமென்பதே ஏற்புடை முடிவாயமையும். தொல்காப்பிய முனிவரது காலத்திற்குப் பிற்பட்டார் அன்றாரெனின், முனிவரது சீரியநூலின் விதியநுசரித்தே செய்யுட் புனைவரன்றி அவ்விதியை நிராகரித்துத் தள்ளார். அதனாற் கோவூர்கிழார் தொல்காப்பிய முனிவருக்கு முந்தியவராயிருத்தல் வேண்டுமென்றே துணியவேண்டும். அஃதோடு அமையாமல், அவர்கள் இருவர் காலமும் சில நூற்றாண்டுகளாவது இடையிட்டிருக்க வேண்டுமென்றும் தக்க காரணத்தோடு ஊகிக்கலாம்.

உந்தீற்றுச் சொற்களும், தொல்காப்பியமும்.

தொல்காப்பியர் உந்தீற்றுச் சொற்களைச் செய்யுளிடை மட்டிலும் நிலவுஞ் சொற்களெனக் கருதியிருந்தனரென்று அவரது "உம்மூந் தாகு மிடனுமா றுண்டே" என்னும் சூத்திரங்கொண்டு நிறுவ இயலாதாயினும் தொல்காப்பிய உரையாசிரியரனைவரும் செய்யுளினின்று மாத்திரம் உதாரணம் தருவதனால் முனிவரும் அக்கொள்கையினராயிருத்தல் கூடுமென்று ஊகிக்கலாம். தமது காலத்து உலகவழக்கில் இசசொல்லின் வினைமுற்றுபபிரயோகம் இயன்றுவந்திருப்பின் அதனைக் குறித்து அவர் தம் நூலிற் கூறுதிருபபரா? கூறுது விட்டமையே முன்னர்க் காட்டிய முடிவை ஒருதலையாக உறுதிப் படுத்துகின்றது. தமிழில் உந்தீற்று வினைமுற்று வழங்கிய காலம் யாதாயிருப்பினும், தொல்காப்பியர் தமது நூலை இயற்றிய காலத்தில் தமிழகத்தில் அவ்வழக்கு அறவே ஒழிந்து

போயிற்றென்றே முடிக்கவேண்டும். கோவூர்கிழார்காலத்தை யொட்டி இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யப்படின் அன்னார் காலத்தே இவ்வுந்தீற்று வினைமுற்றுக்கள் தமிழ்நாட்டிடை வழக்கில் நிலவியிருக்கவேண்டுமென்று ஒருவாறு துணியலாம். உலகவழக்கிலிருப்பனவற்றையே கவிஞர் பெரும்பாலும் எடுத்தாளுவர்; வழக்கிலில்லா ஓர் அரிய பிரயோகத்தை கவிஞர் ஒருவர் தம் செய்யுளிடைப் புகுத்திவிட்டனரெனக் கோடல் அத்துணை பொருத்தமாகத் தோன்றவில்லை.

கவிஞர்கள் தம் செய்யுளில் இயற்சொற்களைத் தவிர்த்துத் திரிசொற்களைக் கையாளினும் மொழிவழக்கின் அடிப்படையெனக் கருதத்தகும் வாக்கியத்தின் வினைமுடிவுபோன்ற வடிவங்களை (Fundamental grammatical forms) அடியோடு மாற்ற அன்னாருக்கு ஒருவகையானும் இயலாது. இக்காரணம் தானே கோவூர்கிழாரது செய்யுளில் வரும் இவ்வினைமுற்றுப் பிரயோகம் அவர் காலத்துத் தமிழுலக வழக்கை நமக்குச் செவ்வனே தெளித்துக் காட்டுதற்கு ஓர் உயர் மேடை விளக்கமாய் அமைகின்றது. கோவூர்கிழார் காலத்தே உந்தீற்று வினைமுற்றுக்கள் பண்டைத் தமிழ்மக்களாற் கையாளப்பட்டு வந்தன வென்பதனைப் பண்டை மொழிவழக்கின் போக்கைத்தழுவிய மலைநாட்டார் வழக்கும் இதர திராவிட மொழிகளின் வினைமுற்றுப் பிரயோகங்களிலமைந்துள்ள சில உறுப்புக்களுமே காட்டும். இவற்றைப் பின்னர் விளக்குவோம். இங்கே தொல்காப்பியரின் சூத்திரத்தினைச் சிறிதாராய்வோம்.

தமிழ் இலக்கண நூல்களிற் கூறப்படும் இடைச்சொல் யாதென நோக்குங்கால் பெயர், வினை, உரியென்பன வொழிய மற்றெச்சொல்லையும் ஏற்கும் ஓர் இலக்கணத் துராற்குவியலென்றே அதனைச்சொல்லலாம். மொழியுற்பத்திக் காலத்தில் முதற்றோன்றினவாய பொருட் குறிப்பையும், இயக்கப்பண்புக் குறிப்பையும், நிலைப்பண்புக் குறிப்பையும் பற்றிய பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல்

என்னும் மூன்றனையும் நீக்கிப் பிற சொற்களையெல்லாம் இடைச்சொல் என்னும் ஒரு பொதுப்பாகுபாட்டினுட்பெய் தடக்கினர். 'இடைச்சொல்' என்ற இவ்வகைத் தொகுதி யில் 'போல' 'புரைய' முதலிய முழுச்சொற்களும்,[1] 'ஏ' 'ஓ' 'உம்' முதலிய அரைச்சொற்களும்[2] 'அம்' 'அன்' போன்ற சாரியையாய் ஒரு பொருளும் குறியாது நிற்கும் போலிச்சொற்களும்,[3] விரவலுற்றுக் கிடக்கின்றன. இதனை விரித்து அமயம் நேர்ந்துழி விளக்குவோம். இங்கு நாம் எடுத்துக்கொண்ட 'உம்'மும் 'உந்து'ம் முற்கூறிய மூன்று வகை இடைச்சொற்களில் இரண்டாவது வகை அரைச சொற்களின்பாற் படுவனவேயாம். இவையும் முழுச்சொற் களபோலப் பொருளுணர்த்தினவேனும் அவற்றைபபோலத் தனியே நின்று பொருளைத்தரா. 'உம்' என்னும இடைச் சொற்பொருளை எட்டெனப பாகுபாடுசெய் துரைத்த தொல்காபபியர் ஒரு வினைச்சொல்லின் ஈற்றில் நிற்கும் 'உம்' விகுதியாய இடைச்சொல்லின் பொருளைச் சுட்டப போந் தாரலல ரென்பது தெளிவே. வினைசசொலலீற்றில பன்மை, எதிர்காலம் என்பவற்றைக் குறித்துவரும் 'உம்' விகுதியை நீக்கினும் 'வேண்டும்' என்னும் வியங்கோள் உம்மையினும் 'காண்டலும் கலுழ்ந்தான்' என்னும் உடனிகழ்ச்சி அலலது ஏகதேச சமகாலப பொருள (Immediacy) தரும் வினை யெசச உம்மையினும் வரும் பொருட்பெருமை நோக்கியே னும் மற்றை எண்வகைப பொருள்களோடு இவையும் சேர்க்

---

1. தனியே நின்று ஒரு பொருளைத் தருவது 'முழுச்சொல்' எனபபடும்.

2. தனியே நின்று ஒரு பொருளைத் தராதேனும் வேறொரு மொழியொடு சேர்ந்து அம்மொழியின் பொருளை மாற்றத்தக்கது 'அரைச்சொல்' எனப்படும்.

3. தனியேநின்றவிடத்தும் பிறிதொரு மொழியொடு சேர்ந்த விடத்தும் ஒரு பொருளையும் பயவாமல் நிற்பது 'போலிச்சொல்' எனப்படும்.

கப்பட்டிருக்கலாமே என்னின் அங்ஙனம் சேராமைக்கு ஒரு காரணமே தொல்காப்பியரைத் தூண்டியிருக்கலா மென்று ஊகிக்க இடமுளது. இங்குக்கூறிய இரண்டு உம்மைகளும் சொல்லில்நின்றும் பிரிக்கவியலாப் பெற்றியவாதலின் பெயர்ப் பின் வருவதாய்ப் பிரிக்கத்தகும் 'உம்'மோடு விரவலுறாது வேறுவைக்கப்பட்டன வென்பதே அக்காரணம். அங்ஙனமா யின் பெயர்ப் பின்வரும் 'உம்'மை யடுத்து வினைப்பின் வரும் 'உம்' என்பதன் திரிபாகிய 'உந்து' என்பதை எடுத்துக் கூறுதல் வழூவாய்முடியும். வினைப்பின் வரும் 'உம்' என்ற இடைச்சொல்லின் பொருளையும் எண்வகைப் பொருளோடு பெய்து கூறியிருப்பரேல 'உம் உந்தாகு மிடனுமாருண்டே' என்னும் சூத்திரம் இங்கு அடுத்து வருதற்குத் தக்க நியாய முண்டென எண்ணலாம். அவ்விதம் கொள்ளற்கு இங்கு இடமில்லை. வினைச்சொல்லின் விகுதியாய் வரும் 'உம்' தருகின்ற பன்மைபொருள், காலப்பொருள், வியங்கோட் பொருள் என்பவற்றுள்ளே, பன்மைப பொருளை முற்கூறிய எண்வகைப் பொருளில 'எண்' அல்லதுஅளவைப பொருட் கண் ஒருவாறு கொண்டடக்கினும், எஞ்சிய காலப பொருளை யும் வியங்கோட் பொருளையும் எதன் கீழடக்க முடியும்? அதனால் 'உம்' என்னும் இடைசசொற்பொருளை வரையறை செய்துழி தொல்காப்பியனார் வினையீற்றில வரும் 'உம்' விகுதியாகிய இடைசசொல்லின் பொருளை ஒழித்துவிட்டன ரென்றே முடிவு செய்யவேண்டும். இம்முடிவினால் வினை யீறுய 'உம்' என்பது மருவி 'உந்து' ஆயிற்று என்று கூறும் தொல்காபபியனாரின் சூத்திரம் தொடர்பு கெட்டு நிற்கின்ற தென்றே கொள்ளவேண்டும்.

உந்தீற்றுச்சொற்களும் நன்னூலும்.

இத்தொடர்பின்மையைப் பவணந்தி ஒருவாறு ஒழித்துள்ளார். 'உந்து' என்பது 'உம்' என்னும் பெயரெச்சவிகுதியின் திரிபென அவர் கொண்டு பெயரெச்சச சிறபபு விதிச் சூத்திரத்துள் இதன் இயல்பைக் காட்டினர்.

"செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே."

என்று சூத்திரம் இயற்றினர். இதனால 'உந்து' என்பது செய்யுள் வழக்கென்றே பவணந்தி கொண்டனரென்று தெரிகின்றது. கோவூர்கிழார்காலத்து உலகவழக்கில் உந்தீற்றுச் சொற்கள் நிலவினவோ வென்றறிந்துகொள்ளப பிற்கால இலக்கண நூலாருக்கு வழியின்றிப போயதனால இம்முடிவுக்கு வந்தனரன்றி வேறென்? செய்யுள் வழக்கென்றே கொள்ளினும் சங்கச் செய்யுட்களை நீக்கிவிட்டுப பிற்காலச் செய்யுட்களை நோக்குமிடத்து இவ்வுந்தீற்றுச் சொற்பிரயோகம் பயின்று வந்திருப்பதாகத் தெரியவிலலை.

செய்யுள் வழக்கெனின் முன்னோர் மரபினைப் பொன்னெனப்போற்றும் பிற்காலத்துப புலவர்களுள் ஒருவரேனும் ஏன் இதனைக் கையாடாது விடுத்தனர்? உந்தீற்று வினைமுற்றுப பிரயோகம் தமிழகத்தில முற்றும் இறந்துபட்டமையே அவர் அங்ஙனம் கையாடாததற்குரிய தக்க காரணம். புலவர்கள் தம் செய்யுட்களிற் செய்துகொள்ளும் மொழி விகற்பங்கள் பலவேனும், செய்யுட்கருத்தின் உயிா நிலையாகிய வினைமுடிவில் அவை வந்து பொருந்துமென்பது பெரிதும் ஐயப்பாட்டிற்கிடமே. மேலும், செய்யுளவழக்கிலுங் கூடப பண்டைப்புலவர்களில் எழுவர் எடுத்தாளத்தக்க பெருமையுற்றிலகுவது இப்பிரயோகமென்னின் இதனை உலகவழக்கில் நின்றும் புலவர்கள் எடுத்துக்கொண்டனரென்று கூறலே ஏற்புடைத்து. இதனை ஒன்றிரண்டு கவிஞர்கள் மட்டிலும் புதிதாய் இயற்றியமைத்துக் கொண்ட விகற்பமெனக் கொள்ளுவதெங்ஙனம்? இதுவுமன்றி, புலவர்கள் ஆண்டுள்ள வழக்கிலும் உந்தீற்றுச் சொற்கள் பெயரெச்சமாய் நில்லாது வினைமுற்றாய் வந்தியலு மென்னின் இலக்கண நூலார் இப்பிரயோகத்தின் பூர்விக சரித்திரத்தை முற்றும் ஆராய்ந்துணர்ந்திருந்தாரெனக் கூறமுடியவில்லை. இத்தடுமாற்ற

மனைத்தும், உந்தீற்று வினைமுற்றுப் பிரயோகம் அவர்காலத்தில் தமிழகத்தில் இறந்தொழிந்தமையால் எழுந்தனவேயாம்.

**உந்தீற்றுச் சொற்களும் தமிழிலக்கண நூலாரும்.**

'உந்து' என்னும் விகுதியின் மூலமெனத் தமிழிலக்கண நூலார் கொள்ளும் 'உம்' மலையாள மொழியில் திணைபாலிட வேறுபாடின்றி எல்லா வினைமுற்றுக்களேயும் முடிவு செய்கின்றது. உதாரணமாக, 'ஞான் செய்யும், ஞங்ஙள் செய்யும், நீ செய்யும், நிங்ஙள் செய்யும், அவன் செய்யும், அவள் செய்யும், அவர் செய்யும், அது செய்யும், அவ செய்யும்,' என்று வருவனவற்றிலெல்லாம் 'உம்' எதிர்காலத்தை மட்டிலும் சுட்டியதே யன்றி வேறொன்றையும் காட்டவில்லை. தமிழில் தொல்காப்பியரைப் பின்பற்றிய பவணந்தி கூறும்

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே"

என்னும் சூத்திரங் கொண்டு நோக்கின், படர்க்கையில் 'அவன் செய்யும், அவள் செய்யும், அது செய்யும், அவை செய்யும்' என்று வருதலே தக்கதாம். ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவற்றைக் குறிக்கும் விகுதிக்குறியீடுகள் இவ்வினைமுற்றுக்களில வந்து சேரவேயில்லை. தன்மையிலும் முன்னிலையிலும் செய்யுமென் வினைமுற்று வரலாகாதெனப் பவணந்தி விலக்கினரெனினும் ஆண்டும் அவ்வினைமுற்றுப் பிரயோகம் நிகழ்கின்றதனைக் காணலாம்.

| | இறப்பு. | எதிர்வு. |
|---|---|---|
| தன்மைப் பன்மை. | யாம் உண்டும் | யாம் உண்கும் |
| | யாம் வந்தும் | யாம் வருதும் |
| | யாம் சென்றும் | யாம் சேறும் |
| முன்னிலைப் பன்மை. (ஏவல்) | | நீர் செய்யும் |
| | | ,, உண்ணும் |

| | |
|---|---|
| ஐம்பால் மூவிடத்[1] | யான் செய்யவேண்டும் |
| திற்கும் | யாம் செய்யவேண்டும் |
| பொதுவாய | நீ செய்யவேண்டும் |
| வியங்கோள். | நீர் செய்யவேண்டும் |
| | அவன் / அவள் / அவர் / அது / அவை } செய்யவேண்டும். |

இதில் தன்மைப் பன்மையில் வரும் 'உம்' விகுதிகளை, கும், டும், தும், றும் என்ற விகுதிகளெனத் தொல்காப்பியர் காட்டிய நெறிவழிச் சென்று பவணந்தியும் கொண்டமையால் 'உம்' தன்மைக்கண் வாராதென்ற முடிவு பிற்காலத்து ஏற்பட்டது. ஆயினும் ஈண்டும் எண் அல்லது அளவைப் பொருளைச் சுட்டுவதாகிய 'உம்' வந்து கூடித் தன்மையோடு பன்மையையும் குறிப்பது வெளிப்படை.

| ஒருமை | ... | பன்மை |
|---|---|---|
| யான் உண்கு | ... | யாம் உண்கும் |
| யான் உண்டு | ... | யாம் உண்டும் |

இங்கே 'உண்கும்' என்பதனை உண்கு+உம் எனப்பிரிக்க வேண்டுமே தவிர உண்கு+ம் எனப் பிரித்தல் பொருந்தாது. ஒருகால் தன்மையில் உம்மீற்று வினைமுற்று வாராதெனப் பவணந்தி சொல்வதுபோற் கொள்ளினும் முன்னிலைப் பன்மையில் வரும் உம்மீற்று வினைமுற்றை ஒதுக்க ஒருவழியுங் காணோம். 'வேண்டும்' என்னும் ஏவல் கண்ணிய வியங்கோளில வரும் உம்மீற்றுவினை எல்லாப் பாலிடங்களுக்கும் பொருந்தி வருவதும் மறக்கற்பாலதன்று.

---

1. வியங்கோள் தன்மை முன்னிலைக்குச் சிறுவரவிற்றாகு மென்றனர் தொல்காப்பியர். (சொல்லதிகாரம், வினையியல், சூத்திரம், 27.)

தமிழிலக்கண நூலார் உம்மீற்று வினைகளுக்கு வேண்டிய விதிகளை நுணுகிச்சென்று அமைத்திருப்பினும் அவற்றைக் கடந்து நிற்பனவாய உம்மீற்று வினைச்சொற்களும் உள வெனவே மேற்காட்டிய தன்மை முன்னிலைப் பிரயோகங்கள் நிலைநாட்டுகின்றன.

இஃதன்றியும், கு, டு, து, று; கும், டும், தும், றும்: என்னும் வினைமுற்று விகுதிகளைப பற்றித் தமிழிலக்கண நூலார் கொண்டிருக்கும் ஒன்றோடொன்றொவ்வாத கொள்கைகளே அவற்றின் உண்மைத் தன்மையை நிச்சயித்தலில் அவர்க்குத் திகைப்பு நிகழ்ந்ததென நன்கு காட்டும். 'யாம் உண்டும்' என்பது எதிர்காலம் சுட்டி 'யாம் உண்போம்' எனப பொருள்படு மென்றனர் தொல்காப்பிய வுரையாசிரியராகிய இளம்பூரணர் ; பவணந்தியோ 'டவ்வொடு கழிவும்' என்று சூத்திரமியற்றி அதற்கு 'யாம் உண்டோம்' என இறந்த காலப்பொருள தந்தனர். தன்மை யிடம் இங்ஙனமாக, முன்னிலையிடத்தில் 'நீ உண்டி' என்பதற்கு 'நீ உண்டாய்' என்று பொருள் கொண்டனர் இளம்பூரணர் ; நச்சினார்க்கினியரோ 'நீ உண்பாய்' என எதிர்காலப பொருளுரைத்தனர். கலித்தொகை, மருதம் 20-ல வரும் "நுந்தைபாலுண்டிசில" என்பதற்கு நசசினார்க்கினியர் வரைநதிருக்குமுறையை நோக்குக. வினைமுற்றைவிட்டு வினையெசசத்தினை எடுத்துக்கொள்ளினும் ஆண்டும் பொருள் முறையில் அபிபிராய பேதமே. புறம. 152-ல வரும் 'சொலலுபு' என்ற எச்சத்திற்கு 'சொலலி' என்ற இறநதகாலப பொருள் தந்தனா அந்நூலுரையாசிரியர்; அகம். 1-ல் வரும் 'காய்பு' என்ற எச்சத்திற்குக் 'காய' என்று எதிர்காலப பொருளுரைத்தனர் அந்நூலின் குறிபபுரைகாரர். இவற்றில் நாளடைவில் காலபபொருள் மாறபபட்டுபபோயிற்றெனக் கொள்ளினும் மேற்றந்த அட்டவணையில வரும் பிரயோகங்களிற் பெரும்பாலன பண்டைத் தமிழ்மொழியின் வினைமுற்றில் திணைபாலிடக் குறியீடுகள் இல்லாதிருந்தன வென்பதைத் தெளிவுற நாட்டும்.

*உந்தீற்று வினை முற்றும் மலையாளமும்.*

தமிழிலும் மலையாளத்திலும் வினைச்சொல்லிறுதியில் வரும் 'உம்' விகுதி எங்ஙனம் எதிர்காலத்தைக் காட்டிற்றோ அதுபோல மலையாளத்தில் 'உந்து' என்னும் விகுதியுடன் வரும் வினைமுற்றுச்சொல் நிகழ்காலத்தை இன்றும் குறித்துநிற்கின்றது. ஞான் செய்யுந்நு, ஞங்ஙள் செய்யுந்நு, நீ செய்யுந்நு, நிங்ஙள் செய்யுந்நு, அவன் செய்யுந்நு, அவள் செய்யுந்நு, அவர் செய்யுந்நு, அது செய்யுந்நு, அவ செய்யுந்நு என்பன உதாரணங்களாம். நிகழ்கால வினைமுற்றை முடிக்கும் இவ்'உந்நு' என்னும் உருபு 'உந்து' என்னும் நிகழ்கால வினைமுற்று விகுதியின் மரூஉவெனக் கொள்வதே பொருத்தம். தமிழ்மொழிக்கணுள்ள நிகழ்கால 'உந்து'ப் பிரயோகம் தம் ஆராய்ச்சியில அகபபடாமையால் கால்டுவெல் ஆசிரியரும் "கேரளபாணினீயம்" என்னும் மலையாள நூதன இலக்கண நூலின் ஆசிரியரும் மலையாள நிகழ்கால வினைமுற்று விகுதியாகிய 'உந்நு' தமிழிற் பிற்காலத்துதித்த 'கிறு' 'கின்று' என்னுமிடைநிலைகளின் மரூஉ வெனை நிரூபிக்கப் பல நியாயங்களையும் காட்டலாயினர். 'இடைநிலை' 'விகுதி' யென்னும் தமிழ் இலக்கண நூலாரின் பாகுபாட்டைத்தான் அவர் மதியாது தள்ளினும், 'கின்று' என்பது 'குந்நு' என வருதற்குக் கூறும் நியாயங்கள் சிறிதும் ஒப்பத் தக்கனவாகா. 'ன்று' என்பதை 'ந்நு' வென 'மூக்கொலிபுணர் நியதி'யால் (Nasalization) பெற்றோமெனினும், 'கி' என்பது 'கு' ஆயதற்கு 'ஓரினம்படையுயிர்' நியதி (Harmonic sequence of vowels) எனக் கூறியது அத்துணைப் பொருத்தமெனக் கொள்ள இடமில்லை. 'கின்று' 'கின்னு' வெனத் திரியவேண்டியதிருக்க, 'குந்நு' வெனத் திரிந்து பிற்கடை நின்ற உகரத்தின் வலியால் முன்னர் வந்த இகரமும் உகரமாயிற்றெனக் கூறின், அங்ஙனம் ஏனைய திரவிட பாஷைகளில் சம்பவியாததென்னையோ? 'ஓரினம் படையுயிர் நியதி' மலையாள மொழி ஒன்றைத்தானா பாதித்தது? இஃதன்றியும் மாறுதல்

எளிதிலேற்கப்பெறு ஒலியைப் பற்றிய ஆராய்ச்சியடங்கிய ஒலிநூற் சித்தாந்த வழி நோக்கின் 'உந்து' என்பதில் (i) ஈற்றுகரம் கெடினும் விகுதியின் உயிர்நிலை உகரமாகும் முன் னுகரம் கெடாதென்றும் (ii)'கின்று' என்பதன் நடுவண்ண (Palatal) னகரம் 'உந்று'வில் வரும் பல்லண்ண (Dental) 'ந'கரமாய் இயல்புதிரிதல் அரிதென்றும் அறிவோம். திரவிடர் அல்லாத ஜாதியாருக்கு இங்குக் கூறிய 'ன'கர 'ந'கர வேற்றுமை எளிதிலறிந்து கொள்ளக்கூடா வொரு ஒலி வேற்றுமைதானென்று டாக்டர் கால்டுவெல் என்னும் மொழிநூலறிஞர் தாமே அவர் நூலிற் சம்மதித்தெழுதினர். மலையாளத்தில் இப்பொழுது கையாடி வரும் 'லிபி' அல்லது வரிவடிவெழுத்து இவ்வேற்றுமையினைத் தெளித்துக் காட்டத் தக்கதாயில்லை.

தந்து = തന്നു

கன்று = കന്നു

இங்கு 'ന്നു' இருவித னகரவொலியையும் சுட்டிற்று. எழுத்துக் குறையால் இப்பிறழ்ச்சி ஏற்படினும் ஒலியை மாத்திரம் கொண்டு ஆராய்வோமாயின், 'உந்று' என்னும் வினைமுற்றுவிகுதியை மலையாளிகளெல்லோரும் இன்னும் தந்நகரமாகவே (Dental *n*) உச்சரித்து வருகின்றனர். அதனை றன்னகரமாக (Palatal *n̲*) யாரேனும் உச்சரிப்பரேல் அதுவே அவர்கள் மலையாளிகளல்லரெனக் காட்டப்போதியது. இக்காரணம் பற்றியும் 'உந்து' என்பதன் திரிவே 'உந்று' என்று கொள்வதே ஏற்புடைத்து. மொழியுச்சாரணத்தில் இத் 'தந்நகர' 'றன்னகர' வேற்றுமையினைத் தற்காலத்தமிழர் பாராட்டாது போயினரேனும், மொழிகள் எழுதப்படுமுறையில் பண்டையத் தமிழிலக்கியங்கள் இவ்வேற்றுமையினை நன்கு போற்றி வந்துள்ளன வென்று எளிதில் அறிந்துகொள்ளலாம். பழைய இலக்கியங்களில் 'என்னுநள்' 'மண்ணுநள்' 'வாழ்நர்' 'வல்லுநர்' 'அணிகுநர்' எனவரக் காண்போமே தவிர 'என்னுனள்' 'மண்ணுனள்' 'வாழ்னர்' 'வல்லுனர்' 'அணிகுனர்,' எனவரக் காண்கின்றோமில்லை. இங்ஙனம், எழுத்துமுறைமை

லாவது 'ந'கர 'ன'கர வேற்றுமை தமிழில் இன்றும் போற்றப்பட்டுவருவதை நாம் மறத்தல் கூடாது. 'கின்று' என்பதிலிருந்து 'உந்நு' திரிந்து பிறந்து விட்டதென இன்னும் சாதிக்கத் தொடங்குவார் இவ்விரு வழியினும் நிகழவேண்டுவனவாய பலவேறுபாட்டின் தொடர்ச்சிக் கிரமத்தையேனும் உற்று நோக்கி ஓர் முடிவுக்கு வருவாராக.

| 'கின்று' என்பதிலிருந்து 'உந்நு' வின் உற்பத்தி. | 'உந்து' என்பதிலிருந்து 'உந்நு' வின் உற்பத்தி. |
|---|---|
| அது ஆகின்று | அது ஆகுந்து |
| 1. அது ஆகின்னு | 1. அது ஆகுந்நு. |
| 2. அது ஆகுன்னு | |
| 3. அது ஆகுந்நு. | |

விகாரம் புகுந்த இவ்விருவித முறையுள் எதனை ஒப்புக்கொள்வதென்பது நாம் கூறாமலே போதரும்.

இதுவுமன்றி, 'கின்று' மருவி 'உந்நு' வரவில்லையென்பதற்கு வேறொரு நியாயமுமுளது. சாதாரண ஜனங்களிடைப் பயிலும் தமிழில் 'கிறு' என்னு மிடைநிலை பெற்று நிற்கும் வினை வருதலேயன்றி 'கின்று' என்னும் இடைநிலையொடு வரும் நிகழ்காலவினை வழங்குவதே இல்லை. அது நூலிடையேதான் பெரும்பாலும் பயின்றுவரும். இவ்வாறாயின் 'கிறு' என்பது 'உந்நு' வென மருவலாயிற்றென்று கொள்ளவேண்டியதாகின்றது. அவ்வுருபு எத்துணைதான் மாற்றமடையினும் 'உந்நு' வென்று பரிணமிக்குமாறில்லை.

மேற் காட்டியவற்றால் மலையாள மொழியில் நிகழ்கால வினைமுற்றின் விகுதியாய 'உந்நு' பண்டைத் தமிழில் வழங்கிய 'உந்து' என்ற விகுதியின் திரிவே என்பது தேற்றம். 'உந்நு' என்பதன் உற்பத்தி அவ்வாறு பழமை வாய்ந்துள்ளதெனின் அதன் பூர்வ உருவமாய 'உந்து' ஏனைய திரவிட மொழிகளிலும் வந்து பயின்றிருக்க வேண்டுமே; அங்ஙனம் பயின்றிருப்பதுண்டோ வெனச் சிலர் ஆசங்கிக்கலாம். இவ்வாசங்கையை நீக்குமாறு

உந்து விகுதியும் ஏனைய திரவிட மொழிகளும்.

தெலுங்கு, கன்னடம் என்னும் இரண்டு மொழிகளையு மெடுத்து இங்கு ஒப்பிட்டு நோக்குவோமாக. இவ்விரு மொழிகளிலும் நிகழ்காலவினைமுற்றில் 'உந்து' வந்தியலவதே எனினும் அது பிற்காலத் துதித்த திணைபாலிட விகுதிச் செறிவால வினைமுற்றுசசொல்லின்கண் உள்ளுற அமைந்துபோயிற்று.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| நான் போகிறேன் | நானு ஹோகுத்தேனே | நேனு போவுத்சுன்னானு |
| நாங்கள் போகிறோம் | நாவு ஹோகுத்தேவே | மேமு போவுத்சுன்னாமு |
| நீ போகிறாய் | நீனு ஹோகுத்தீ | நீவு போவுத்சுன்னாவு |
| நீங்கள் போகிறீர்கள் | நீவு ஹோகுத்தீரி | மீரு போவுத்சுன்னாரு |
| அவன் போகிறான் | அவனு ஹோகுத்தானே | வாடு போவுத்சுன்னாடு |
| அவள் போகிறாள் | அவளு ஹோகுத்தாளே | ஆமே போவுத்சுன்னதி |
| அவர் போகிறார் | அவரு ஹோகுத்தாரே | வாரு போவுத்சுன்னாரு |
| அது போகிறது | அது ஹோகுத்ததே | அதி போவுத்சுன்னதி |
| அவை போகின்றன | அவு ஹோகுத்தவே | அவி போவுத்சுன்னவி |

இதில் கன்னடவினைமுற்றில் 'உத்து' என்று வருவதும் தெலுங்கு வினைமுற்றில் 'உத்சு' என்று வருவதும் 'உந்து' என்ற பழைய உருபின் ரூபபேதமே. 'உத்சு' என்பது உயர் தரத் தெலுங்கில் நிகழினும் சாதாரண ஜனங்கள் சிலசமயம் அதனை 'உது' எனத்திரிப்பதுமுண்டு. 'போவுத்சுன்னவு' என்பதனை 'போவுதுன்னவு' என்றும் கூறுவர். இதனால் உத்து, உது, உத்சு என்று காலக்கிரமத்தில் வல்லொலி போக மெல்லொலி வந்து புகுந்தமை அறிந்து கொள்ள லாம்.

வினைமுற்றை விடுத்து இருமொழியிலும் வரும் நிகழ் காலவினையெச்சச சொற்களை எடுத்து நோக்கினும் அவற்றி லும் 'உந்து' என்ற இடைச்சொல்லின் மரூஉ நிலைத்து நிற் பதனைக் காணலாம். தமிழில நிகழ்கால வினையெச்சம் தனி யே ஒன்றிலலை யென்று சொல்வதற்கிடமுண்டு. நன்னூல் கூறும் செய்து, செய்பு முதலிய பன்னிருவகை வினையெச்ச வாய்பாடுகளில 'செய்ய' என்பதொன்றே நிகழ்காலம் சுட் டும் வினையெச்சமெனக் காட்டபபட்டிருக்கிறது. இந்த 'செய்ய' என்னும் வினையெச்சமும் முக்காலத்திற்கும் பொதுவாய் நிகழ்வதேயாதலினால நிகழ்காலத்தைக் குறிக்கத் தமிழில் பிரத்தியேக வினையெச்ச மொன்றிருந்ததில்லை யென்றும் 'செய்ப' என்னும் எதிர்கால வினையெச்சத்தையே பொருளேற்றி நிகழ்கால வினையெச்சமாய் சமைத்துக் கொண்டனரென்றும் முடிக்க வேண்டியதிருக்கின்றது. இவ்விதம் உந்துருபைக் காட்டத்தகும் நிகழ்கால வினை யெச்சம் தமிழில் இலலாது போயினும், ஏனைய திரவிட மொழிகள் அதனைப பெற்று நிற்கின்றன வென்றறியக் கிடக் கின்றது.

| நிகழ்கால வினையெச்சம் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| போக* (going) | ஹோகுத்த | போவுத்சு |
| கட்ட* (tying) | கட்டுத்த | கட்டுத்சு |

*தமிழில் இவை எதிர்காலப் பெயரெச்சங்களாம்.

இவற்றுள்ளும் உந்தின் திரிபாய 'உத்து' 'உத்சு' வந்தியல்வதைக் காணலாம்.

தற்காலத் தெலுங்கின் நிகழ்கால வினைச்சொல்லில் 'உத்சு' என்ற உருவம் காணப்படினும் அது பண்டைத் தெலுங்கில் 'உது' என்ற உருவத்தோடு வந்திருப்பதையும் நோக்குக.

| தமிழ் | பண்டைத் தெலுங்கு |
| --- | --- |
| நான் போகிறேன் | நேனு போவுதுனு |
| நாங்கள் போகிறோம் | மேமு போவுதுமு |
| நீ போகிறாய் | நீவு போவுதுவு |
| நீங்கள் போகிறீர்கள் | மீரு போவுதுரு |
| அவன் போகிறான் | வாடு போவுனு |
| அவள் போகிறாள் | ஆமே போவுனு |
| அவர் போகிறார் | வாரு போவுதுரு |
| அது போகிறது | அதி போவுனு |
| அவை போகின்றன | அவி போவுனு |

படர்க்கையில 'உது' இடைநிலை வந்தியலக்காணோம்; ஆயினும் ஈண்டு எலலாத் திணைபாலுக்கும் பொதுவாய வினைமுற்று வந்திருபபது தானே திணைபால காட்டும் குறியீடுகளனைத்தும் பிற்காலத்தில் உதித்துள்ளனவே யென்னும் முன்முடிபினை வலியுறுத்தும். ஏனைய திராவிட மொழிகளில் 'உந்து' எவ்வாறெலலாம் மாற்றுருவம் தாங்கி நிற்கின்றதென இங்கே தரபபட்ட உதாரணங்களே நன்கு காட்டாநிற்கும்.

| பண்டைத் தமிழ் | மலையாளம் | கன்னடம் | பண்டைத் தெலுங்கு | தெலுங்கு |
| --- | --- | --- | --- | --- |
| உந்து | உந்நு | உத்து | உது | உத்சு |

இங்ஙனம் ஏனைய திராவிட மொழிகளில் இன்றும் நின்றிலகுவதாய இடைநிலை ஒன்றனைத் தமிழ் ஓர் காலத்தே இழந்து போயினமையால், அது நிகழ்காலத்தைக் குறிக்குமென்று தமிழ் இலக்கணநூலார் எங்கேனும் எடுத்துக் கூறினாரல்லர்.

தமிழ் இலக்கணநூலின் உந்தீற்று வினைச்சொற்களை 'உம்' மின் திரிபாய ஓர்விகுதி தாங்கிய பெயரெச்சமெனக் கொள்ளினும் அவற்றில வந்துள்ள விகுதி முதன்முதல் நிகழ் காலங்குறித்ததென்று காட்டத்தக்க சான்றுகளைத் தமிழ் மொழியின் பண்டை இலக்கியங்கள் பொதிந்து வைத்துக் கொண்டிருபபதனை நாம் இன்றும் காணலாம். 'உந்து' பலவாறு விகாரமடைந்து உது, உந், ந், என்ற குறிகளாய் பூர்வத்தில நிகழ்காலம் காட்டி நின்றதென்பது வெளிப்படை. இவை யெல்லாம் விகுதி யென்னும் நிலையை இழந்து இடைநிலைகளாய்ப பெரும்பாலும் வினையாலணையும்பெயர்களுள அடங்கி மறைந்து போயின. இபபெயர்களை எதிர்காலபபொருள் கொடுத்தோ முக்காலத்திற்கும் பொதுவாய பொருள் கொடுத்தோ செலகின்றனர் தமிழ் இலக்கண நூலார்.

'உந்து' என்ற விகுதியும் பண்டைத் தமிழிலக்கியமும்.

'உந்து' 'உது' ஆதல்.

"கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லாகுதுமே" —குறு. 290

இலலாகுதும் = இல + ஆகு + உது + உம்
= உந்து

"வண்மையு முடையையோ ஞாயிறு
கொன் விளஙகுதியால் விசுமபினானே"
—புறம். 374

விளங்குதி = விளங்கு + உது + இ
= உந்து.

'உநது' 'உந்' ஆதல்.

"அறத்தா, றன்றென மொழிநதொன்று படுகிளவி
யன்னவாக வென்னுநள் போல" —அகம். 5

என்னுநள் = என் + உந் + அள்

"காதலற் பிரிந்த புலம்பி னேதக
வாரஞ ருறுந ரருநிறஞ் சுட்டி" —அகம். 71

உறுநர் = உறு + உந் + அர்

"கடும்புனன் மலிந்த காவிரிப் பேர்யாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநள் போல"—அகம். 62.

மண்ணுநள் = மண்ணு + உந் + அள்

"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா" —அகம். 16

உடம்படுநர் = உடம்படு + உந் + அர்

இவைபோல், 'வாங்குநள்' 'தகைக்குநர்', தொலையுந', 'அடுநை', 'விடுநை' முதலியன ஏராளமாய்ச் சங்கவிலக்கியங் களில் வந்து பயிலக்காணலாம்.

**'உந்' 'ந்' ஆதல்.** "அம்மெல் லோதி விமமுற் றழுங்க
லெமமலை வாழ்ந ரிரும்புனம படுக்கிய"

வாழுநர் = வாழ்நர்

** யிடைமுனிநா சென்றவாறே —நற். 39

முனியுநர் = முனிநர்

"பேணினே னல்லெனோ மகிழ்ந வானத்து" —அகம். 16

மகிழுந = மகிழ்ந.

இச்சொற்களிலெல்லாம் 'உந்' இடைநிலையின் உகரம் கெட்டது. 'தமிழ்நர்' என்பதில வரும் நகரவொற்று 'மகிழ்நா' 'புகழ்நா' என்பவற்றை நோக்கி ஒற்றுமை நயம் (analogy) கருதி வந்து புகுந்ததேயாம்.

**உந்தினின்றெழுந்த பல உருபுகளும் நிகழ்கால மும்.** 'உந்து' வினைச்சொலலின் ஈற்றில் நின்று நிகழ்காலத்தைத் குறித்தது போல 'உந்தினின்றெழுந்த உருபுகளெல்லாம் அவை வரும் சொற்களில நிகழ்காலத தையே முதலாவது காட்டி நின்றன. உதாரணமாக, 'பெறுகுநள்' 'அணிகுநா', 'வல்லுநா' 'என்குந' என்னும் நான்கு மொழிகளை எடுத்துக்கொளவோம். இவற்றை

பெறுகு + ந் + அள

அணிகு + ந் + அா

வலலு + ந் + அர்

என்கு + ந் + அ

எனபபிரித்து நடுவில வரும் நகரவொற்றை இரண்டு உயிரெழுத்துக்கள் தம்மை இடையில் நின்று பொருத்தும் இடைநிலை நகரவொற்றாகவோ சாரியையாகவோ கொளவது அமையாதோ வெனின் அமையாது. இங்ஙனம் கண்டவாறு இடைநிலை காண்பாரைக் கட்டுபபடுத்தற்பொருட்டே

"இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே"

என்ற பவணந்தி சூத்திரம் எழுந்ததென்று கூறலாம். வினையாலணையும் பெயர்களின் உள்ளூற அமைந்த எழுத்துக்களை கேவலம் முன்பின் எழுத்துக்களை அசைக்க வெழுந்த இடைநிலைகளெனக் கூறல் தடுமாற்றத்திற்கிடமாம். ஒரு வினையில் நின்று பெறப்படும் வினையாலணையும்பெயரை அதில் நின்று கிளைக்கும் தொழிற்பெயர் முதலியவற்றோடு விரவலுறாது வேறாக ஓரினப்படுத்திக் கொள்ளவேண்டும். அவை தம்முள் நிகழும் இடவேறுபாட்டைக் குறித்துப பவணந்தி சூத்திரம் செய்துள்ளார்; அதுவுமன்றிக் காலங் காட்டுவதிலும் அவை வேற்றுமையுற்று நிற்கின்றன வென்பது வெளிப்படை.

| தொழிற்பெயர் | | | வினையாலணையும்பெயர் | |
|---|---|---|---|---|
| எக்காலங் களுக்கும பொது | வரவு வருகை | இறப்பு: | வந்தவன் | வந்தோன் |
| | | நிகழ்வு. | வருகின்றவன் | வருகின்றோன் |
| | | எதிர்வு: | வருபவன் | வருவோன் |

'வரவு' என்னும் தொழிற்பெயரில வரும் இரண்டாவது வகரவொற்று காலம் காட்டவில்லை; 'வருவோன்' என்னும் வினையாலணையும்பெயரிலோ அது எதிர்காலம் சுட்டிற்றென யாரும் அறிவர். நாம் எடுத்துக் கொண்ட 'பெறுகுநள்' 'அணிகுநா' 'வலலுநா' 'என்குந' என்பவற்றில வரும் நகரவொற்று நிகழ்காலம் குறித்து நினறதெனக் கீழே தரபபடும் அவற்றின் எதிர்கால உருவங்களைக் கொண்டே தாபிக்கலாம்.

"விருந்து பெறுகுவள் போலும்" —அகம். 323
"தாழ்கதுப பணிகுவா காதலா மற்றவா" —கலி. 4
"சொல்லா தகறல் வல்லு வோரே" —குறு. 79
"எம்முந் தொடாஅ லென்குவ மன்னே" —குறு. 191

இனி,

"பகல் விளங்குதியாற் பல்கதிர் விரித்தே" புறம். 8

என்னும் அடியில் வரும் 'விளங்குதி' என்பதற்கு 'விளங்குவாய்' என்று எதிர்காலப் பொருள் கூறினர் பண்டையுரையாசிரியர்; எனினும் 'விளங்குகின்றாய்' எனப் பொருள் கூறுவதே பொருத்தமாகும்.

"தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்" கலி. 71

என்பதற்கு 'நின்னன்பு நீங்காத முயக்கத்தை என்றும் பெறுகின்ற பரத்தையரை வெறுப்பார் யார்?' என்று முக்காலத்திற்கும் பொதுவாக்க 'என்றும்' என்னும் பதத்தையுஞ் சேர்த்துப் பொருள் கூறினர் நச்சினார்க்கினியர். "முக்காலத்து மொத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங்காலத்தானே" என்னும் தொல்காப்பியரது சூத்திரத்தை நோக்கின் நகரவொற்று நிகழ்காலம் குறித்து நிற்பதாகுமென்பது அவர்க்கும் உடன்பாடென்ன ஊகிக்கவு மிடமுண்டு. இறுதியிலுள்ள இரண்டு உதாரணங்களில் வருஞ்சொற்களை விளங்கு + தி, பெறு + ந் + அர், எனப்பிரிக்கின் நிகழ்காலப் பொருள் சிறப்பத் தோன்றுது. அவற்றை விளங்கு + உது + இ, பெறு + உந் + அர, எனப்பிரிக்கின் 'உந்து' என்பதன் திரிபாய 'உது' 'உந்' வந்து நிகழ்காலப்பொருள தருவதை அறிந்துகொள்ளலாம்.

இங்கு எடுத்துக் காட்டிய சொற்கள் போன்றவையெல்லாம் ஓர் காலத்து நிகழ்காலம் குறித்தனவே யாயினும் பிற்கால வழக்கில் எதிர்காலப் பொருள் அல்லது முக்காலத்திற்கும் பொதுவாய பொருள் தருவனவாய்த் திரிந்து போயின. வினையாலணையும்பெயர்ச்சொல்லுள் இவை பெரும்பாலும் ஒடுங்கி மறைந்தமையால் அவற்றின் காலக்குறிப்பை இலக்கண நூலார் மதியாது பிறவாறு விதி கற்பிக்கலாயினர். இலக்கண சரித்திரம் எழுதாது வழக்கிலிருக்கும் மொழிக்கே அவர் விதி கற்பிக்க முன்வந்தாராதலினுல் அவரைக் குறை கூறவும் இடமின்று. ஆயினும் தௌளிய பொருள்கோளுக்கு

மொழிகளின் சரித்திரமும் ஆவசியந்தானென்பதைக் கீழே தரப்படும் சில உதாரணங்களே காட்டும்.

குருமார், தேவிமார், தோழிமார், முதலிய பெயர்ச் சொற்களில் வரும் 'மார்' விகுதி போன்ற ஒன்றே 'கொண்மார்' என்னும் படர்க்கை வினைமுற்றிலும் வந்ததெனக் கருதினர். இதில் விகுதி 'மார்' அன்று; 'ஆர்' என்பதேயாம். 'என்மார்' 'அன்' சாரியை பெற்று 'என்மனார்' என்று விரிந்த வழி பல இலக்கண ஆசிரியர்களும் அதற்குப் பலவித இலக்கணம் கற்பிக்கலாயினர். அவற்றுள் சேனாவரையர் கொள்கையே பொருத்த முடையதாய்த் தோன்றுகின்றது. அவர் 'என்மனார்' என்பதனை ஆரீற்று எதிர்கால முற்றுச சொல்லாகக் கொண்டனர். 'கொண்மார்' என்பதும் அது போன்ற ஓர் எதிர்கால முற்றுச் சொலலே.

கொள்ளுமவர்*
= கொள்ளுமார்
= கொள்மார்
= கொண்மார்.

'என்மனார்' என்பதற்கு நச்சினார்க்கினியர் நிகழ்காலப பொருள் தந்தனரேனும் 'கொண்மார்' என்பதற்குப பெரும்பாலாரும் 'கொள்வார்' என்று எதிர்காலப பொருளையே தந்தனர். மகர வொற்றின் முன்னிற்கும் 'கொள்' என்ற பகுதியிலோ பின்வரும் 'ஆர்' என்ற விகுதியிலோ காலப் பொருளை ஏற்ற இடமில்லை. அதனால் மகர வொற்றே எதிர்காலம் காட்டிற்றெனக் கொள்ளல வேண்டும். பழந்தமிழில் மெய்யொற்றுக்களைக் கொண்டே வினைச்சொல்லுள் எதிர்காலம் குறித்தனர் என்பதற்குப பல சான்றுகள் சங்கச் செய்யுட்களில் உள. இனியும், 'கொண்மார்' என்பதில் 'ஆர்'

* மொழிகளின் முதல், இடை, கடையில் நிற்கும இரண்டு குறிலை ஒழித்து ஒரு நெடில் வந்து நிலைக்குமென்பது ஒலிநூலுண்மையாம். உதாரணம : (முதலில்) உவகை, ஓகை ; முகவாய், மோவாய்; சிவத்தல், சேத்தல்; வியர், வேர்; துகள், தூள்; (இடையில்) சிறுவர், சிறார்; கிழவன், கிழான்; (கடையில்) நிலவு, நிலா; வயவு, வயா முதலியன.

விகுதிகொள்ள வேண்டு மென்பது, செய்யுளில் அது 'ஓர்' ஆகத்திரிந்து வருவதே காட்டும்.

"அறியா ரம்மவஃ துடலு மோரே" —அகம். 315
"நீயே முன்யா னறியு மோனே" —புறம். 137

என்ற அடிகளில் வரும் 'உடலுமோர்' 'அறியுமோன்' என்றபதங்களை உடலும்+ஓர், அறியும்+ ஓன், எனப் பிரிக்காது உடலு+மோர், அறியு+மோன் எனப் பிரிக்கலாமா? அங்ஙனமாயின் 'மார்' விகுதியைப் போல 'மோர்' 'மோன்' என்ற பல விகுதிகள் வேண்டிவருமே. வினையாலணையும் பெயர்ச்சொல்லுள் வந்த காலக்குறியை மதியாமையால் ஏற்படும் தடுமாற்றமே இது.

'மாலை நனி விருந்தயர்மார்' —நற். 155
'எளளுமார் வந்தாரே யீங்கு' —கலி. 81

இவற்றில் வரும் 'அயர்மார்' 'எள்ளுமார்' என்பன எதிர்காலப் பொருளைத் தந்தன. அது பற்றி அவற்றை அயர்ம்+ஆர், எள்ளும்+ஆர், எனப்பிரித்தலே தக்கது.

வினைமுற்றின் ஈற்றில முன்னிலைப்பன்மை யுணாத்தும் 'மின்' என்னும் விகுதியை எடுத்துக்கொளளினும அங்கும் 'இன்' என்பதே பழந்தமிழின் முன்னிலைப்பன்மை விகுதியாய் நிற்பதன்றி 'மின்' அன்று. மலையாள மொழியில் 'செய்யின்' 'செல்லின்' என்பன 'செய்யுங்கள்' 'செல்லுங்கள்' என்னும் பன்மைப் பொருளை இன்றும் தந்து நிற்கின்றன. தமிழ்மொழியில் 'செய்யிர்', 'செய்யீர்' செல்லிர், செல்லீர் முதலிய 'இர்' 'ஈர்' ஈற்றுச்சொற்கள நின்று 'இன்'னீற்றுச் சொற்கள் இறந்துபோயினமையால 'இன்' என்னும் முன்னிலைப்பன்மை விகுதி யொன்றுண்டென தமிழ் இலக்கண நூலார் கூறாது விடுத்தனர். கன்னட மொழியில் 'செய்விர்' என்று இப்பொழுது வழங்குவது பண்டு 'செய்விம்' என நின்றதாகவும் அறிகின்றோம். இது 'இம்' என்னும் விகுதியும் முன்னிலைப்பன்மை வினைமுற்றில் பண்டு வழங்கியிருந்ததெனக் காட்டும். இவ் 'இன்' என்பதற்கு நேராய முன்னிலை ஒருமை 'காண்டி' 'உண்டி' என்பவற்றில் வரும் 'இ'

என்பதே. இ, இன், இர் என்பன முன்னிலை ஒருமை பன்மைகளை எங்ஙனம் உணர்த்தினவோ அதேபோன்று உ, உம் என்பன தன்மை ஒருமை பன்மைகளை உணர்த்தின. கு, டு, து, று, கும், டும், தும், றும் என்ற பண்டை வினைமுற்றுக்களில் வரும் உ, உம் விகுதிகளை நோக்கிக் கொள்க. இவற்றில் எதிர்காலக் குறி யெலலாம் இவ்விகுதிகளின் முன் வரும் மெய்யெழுத்துக்களினுள்ளமைந்தன. இவற்றில் வரும் 'உம்' மை பிற்காலே எதிர்காலம் மட்டிலும் காட்டி நிற்கும் 'உம்' என மயங்கல கூடாது. தன்மை இடத்தையும் பன்மையையும் அது பண்டு சுட்டிற்று. இங்குக் காட்டிய விகுதிகளிலெலலாம் காலக்குறியையும் பின்வந்தேறிய திணைபாலிட விகுதிக்குறியையும் பிரித்துக் காட்டாது தமிழ் இலக்கண நூலார் ஒன்றுபட அவற்றை ஒரு விகுதியுட் பெய்தமைத்தனர். அவர் காலத்தில அக்காலக்குறிகளின் பொருள பிறழ்ச்சியுற்றமையால இங்ஙனம் செய்தனர் போலும்.

'உந்து' விகுதியின் உற்பத்தி.

எல்லாத் திரவிடமொழிகளிலும் நிகழ்கால வினையுள் பல்வேறு உருவம் தாங்கி நிலைத்துநிற்பதான இவ் 'உந்து' எங்ஙனம் வழக்கினுட் புகுந்ததென இனி நாம் ஆராய வேண்டும். தமிழ் இலக்கணநூலார் 'உம்' மருவி 'உந்து' உண்டாயிற்றெனச் சுருக்கத்திற் கூறி முடித்துவிட்டனர். ஆயின், மொழிநூலாராய்ச்சியாளர் இதனை உடன்பட்டுக் கோடல செய்யார். முதற்காரணம், வழக்கிற் பயின்று வரும் ஒரு சொல் தன்னளவிற் குறுகுமே தவிர நீட்டமடைவது அருமை. இரண்டாவதாக, ஆதியில் மக்கள் முழுச்சொற்களேயே உபயோகபபடுத்தி வந்தனரென்றும் அவை நாளடைவில் வழக்கென்னும் கடற்றிரையிற்பட்டு மொத்துண்டு சிதறி பலபல உருபுத் திவலைகளாய் மாறிப்போயின வென்றும் கொள்வதே அவரது அடிப்படையாய சித்தாந்தம். இவ்வுண்மையினைக் கருவியாக் கொண்டு நாம் ஆராயின் இதனை வற்புறுத்துவதான பலசான்றுகள் தமிழ் மொழியிலும் அமைந்து கிடப்பதனைக்

காண்போம். வினைச் சொற்களை எடுத்துக் கொள்ளின் வினைப்பகுதியடிகளை காலங் காட்டாவாதலினால் காலப்பொருள் தர அவற்றோடு முழுச்சொற்களையும் சேர்த்துவந்தனர் என்று ஊகிக்கலாம். இங்ஙனம் துணைவினைகளின் கூட்டுறவால் வினைச்சொல்லுள்ளே காலவேறுபாட்டைக் காட்டினரெனத் தமிழின் பண்டை இலக்கியங்களே போதிய ஆதாரம் தருதலால் அவ்வூகம் உறுதியடைந்து அறுதியாய உண்மையாய் முடிகின்றது. கீழ்வரும் அடிகளை நோக்குக.

"ஊடியா ரெறிதர வொளிவிட்டவரக்கினை" —கலி. 72

எறிதர=எறிய

"காமங் கைம்மிக வுறுதர" —கலி. 51

உறுதர=உற

"நல்வாயிற் போத்தந்த பொழுதினா னெல்லா" —கலி. 84

போத்தந்த=போய

"இன்னா தெறிவரும் வாடையொடு" —குறு. 110

எறிவரும்=எறியும்

கழுது வழங்கியாமத் தழிதகக் குழறும் —அகம். 121

அழிதக=அழிய

வாடா மாலை துயல்வர வோடி —நற். 90

துயல்வர=துயல

இவற்றில் தர, வர, வரும், தக, என்பன எதிர்காலப் பொருளையும் தந்த என்பது இறந்தகாலப பொருளையும் வினைபபகுதியில் ஊட்டி நிற்பதைக் காணலாம். * இவை போன்றே வினைச்சொற்களோடு 'உந்து' என்னும் ஒரு முழுச் சொல்லை இசைத்து நிகழ்காலத்தைக் குறித்திருக்கவேண்டும். இச்சொல் தற்காலத்து 'செல்லல்' 'தள்ளல்' என்ற இயக்கஞ் சுட்டும் 'உந்து' என்ற வினைச்சொல்லென்று கொள்ளற்

* 'எழுந்திருக்க' என்பதில் 'இருக்க' என்னும் துணைவினையை அசைநிலையெனக் கொண்டனர் சங்கரநமச்சிவாயர். 'எழுந்து' என்னும் இறந்தகால வினையின் காலப்பொருளை அது மாற்றுவதை அவர் கருதிலர்.

கிடமில்லை. தன்மையையோ தன்மையை யடுத்துள்ள இடம், பொருள் என்பவற்றையோ பண்டுச் சுட்டிய 'உந்து' என்ற ஒரு சுட்டுப்பெயரில் நின்றே அத்துணைவினையைப பெற்றிருக்கலாம். எந்து, எந்த, அந்தில், அந்த, அந்தோ முதலிய சொற்களிற், சில இலக்கியத்தினுள்ளும், சில வழக்கிலும் பயின்று வருகின்றன. உகரச்சுட்டுப் பிற்கால வழக்கில் வீழ்ந்து போயினமையால் 'உந்து' என்ற சுட்டும் மாய்ந்து போயிருக்கலாம்.

உந்து விகுதியின் பிறிதோர் உற்பத்தி.

திரவிடமொழி ஆராய்ச்சியாளரிற் சிலர் பண்டைத் திரவிட வினைச்சொற்களில் இறபபு, எதிர்வு என்னும் இருகாலக்குறிகளே அமைந்திருந்தனவென்றும் திரவிடர் ஆரியரோடு ஊடாடியதிற் பின்னேயே திரவிடமொழிகளில நிகழ்காலவினை யொன்று நிர்மிக்கப்பட்டதென்றும் முடிவு செய்துள்ளார். ஆநின்று, கின்று, கிறு என்னும் நிகழ்கால இடைநிலைகள் பிற்காலத்துதித்தனவே யாமென்பது அவர் கொள்கை. இவை தோன்று முன்னரே இறந்த காலத்தைக் குறிக்க 'து' விகுதியும் எதிர்காலத்தைக் குறிக்க 'உம்' விகுதியும் தமிழர் உபயோகிததனரென்றும் அன்னார் தீாமானபபடுத்தினர். வினையின் காலக்குறிகளைக் குறித்து ஒன்றேனும் தொல்காபபியர் கூறவில்லையெனினும் வினைச்சொல முக்காலமும் காட்டுமென்று அவரே கூறியிருப்பதனால் அவர் காலத்து நிகழ்காலவினை நிகழ்ந்திருந்ததென்றே கூறவேண்டும். பண்டைத்தமிழில் வினைபபகுதியடியில் சிற்சில வேறுபாடுகளை இயற்றி இறபபையும் எதிர்வையும் காட்டிபபோந்தனர். தமிழில் அநேக வினைகள் 'பகுதி' உருவததிற்றானே பயிலக்காண்கின்றோம். இவையே நிகழ்காலம் குறித்திருக்கலாம். அவையாவும் வினைத்தொகையெனக் கருதபபட்டு முக்காலத்திற்கும் பொதுவெனக் கொள்ளப்பட்டன. நிகழ்வு தனியாகக் காலக்குறியீடு பெற்றுக்கொள்ளாதிருந்ததற்கும் தக்க காரணம் இல்லாமற் போகவுமில்லை. நுணுகி ஆராய்ந்துபார்க்கின், 'காலம்' எல்லாம் இறப்பு, எதிர்வு என்னும்

இருகூறுபாட்டினுள் அமையக்காண்போம். 'காலம்' நிலைத்து நில்லாது என்றென்றும் ஓர் நதி போலப் பாய்ந்து செல்லுவதாதலினால் அதன் நடுவண் நிகழ்வென்னும் ஒரு சிறுகோட்டை நீக்கின் அக்கோட்டின் முன்னுள்ளவெல்லாம் இறப்பின்பாலும் பின்னுள்ளவெல்லாம் எதிர்வின்பாலும் சென்று அடங்கிவிடும். இறப்பு எதிர்வுகளினால் நெருக்குண்டு நிகழ்வாய காலம் தன் பரிமாணம் அறவே குறுகி மாய்ந்துபோகக் காண்போம்.

நிகழ்வு

இறந்தகாலம். ← | ← எதிர்காலம்.

இறந்தகாலம் எதிர்காலம் போலத் தமிழில் நிகழ்காலம் அத்துணை வந்து பயிலாமைக்கு இவ்வுண்மையே அடிப்படையாய காரணமாயிருக்கலாம். ஆயினும் தத்துவ ஆராய்ச்சி ஒருபுறமிருக்க, உலகநடை மொழியுள் நிகழ்காலக் குறியீடு ஏற்படவுந் தக்க காரணமுண்டு. திரவிடர் நிகழ்காலத்தை இறப்பு எதிர்வு என்னு மிருகாலத்தின் உறழ்ச்சியெனக் கொண்டு அவ்விரண்டையும் சுட்டிய விகுதிகளைப் புணர்த்தி இடையிலுள்ள நிகழ்வைக் குறித்திருக்கலாமே. 'உம்' என்னும் எதிர்காலக் குறியையும் 'து' என்னும் இறந்தகாலக் குறியையும் சேர்த்து 'உந்து' என்றாக்கிப பண்டுள்ளார் நிகழ்காலக்குறி யமைத்திருக்கலாமென்று ஒரு சாரார் கூறவும் இடமுண்டு. ஆயினும், 'உந்து' என்னு மொழி இவ்வாறுதித்ததுதானோவென்பது பெரிதும் ஐயபபாட்டிற்கிடமே. மொழிவளர்ச்சிப போக்குள் இத்துணைக் கருதலமைந்த கருவிகளை மக்கள் கையாடினரென்பது பொருந்தாது. அதுபற்றி 'உந்து' என்னும் விகுதியை ஒரு முழுச்சொல்லெனக் கொள்வதே ஏற்புடைத்து.

**சில வினை விகுதி இடைநிலைகளின் பண்டை யுருவம்.**

வினைச் சொல்லின் காலக்குறிகளைக் கூறியவிடத்து அவற்றைக் குறித்துச சில ஆராய்ச்சியாளர் செய்துள்ள முடிவையும் எடுத்துக் கூற வேண்டிய தவசியமே. 'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலை, 'து' என்னும்

இறந்தகாலம் சுட்டும் விகுதி, இவற்றின் உற்பத்தியைக் குறித்து அவர் சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். டாக்டர் கிரால், டாக்டர் குண்டர்ட்டு முதலிய ஆசிரியர்கள் 'கின்று' என்பதனை க்+இன்று எனப் பிரித்து 'க்' எதிர்காலம் சுட்டுவதென்றும் அதனை நிகழ்காலமாக்க 'இன்று' என்னும் சொல் சேர்க்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். டாக்டர் கிற்றல் 'செய்து' என்பதில வரும் 'து' வ்விகுதி முன்னிலைச் சுட்டாம் 'உது' என்பதன் சிதைந்த உருவமே யென்று கூறுகின்றனர். தமிழ்ப்பண்டை இலக்கியங்களில வரும் 'ஆகின்று', 'ஓடின்று' என்பவற்றிற்கு 'ஆகிற்று', 'ஓடிற்று' என்னும் இறந்தகாலப பொருளை உரையாசிரியர் பலா தந்திருக்கின்றனர். ஆயின்

"பருவம் காணது பாயினரூன் மழையே" அகம். 85.

என்னுமடியில வரும் 'பாயின்ருல்' என்பதற்கு அந்நூலுரையாசிரியா 'பரவாநின்றது' என்ற நிகழ்காலபபொருள தருவதையும் நாம் கவனிக்கவேண்டும். இவ்வாறு 'இன்று' என்னும் சுட்டுபபெயா வினைசசொல்லொடு வந்து நிகழ்காலம் குறிக்குமாயின் 'உந்து' என்னும் சுட்டுபபெயரும் அவ் விதமே நிகழ்காலம் குறித்திருக்கலாமென உணரக்கிடக்கின்றது.

இவ்வாறன்றி, 'ஆநின்று' மருவியும் 'ஆகின்று' வந்திருக்கக்கூடும். இதில வரும் 'ஆ' 'செய்யா' என்பதில் வந்த 'ஆ'ப போல இறந்தகால வினையெசசக்குறியே. இதனோடு 'நின்று' என்னும் மொழியைபபுணர்த்தி நிகழ்கால வினைகளை யமைத்துக் கொண்டனர் என்னலாம். இவ் 'ஆ' என்பதேயன்றி 'வா, போ' என்பவை போல 'ஆ' என்னும் வினைபபகுதி ஒன்றுண்டு. இதற்கு இறபபும், எதிர்வும் இருவிதத்திற் சமைத்துக்கொணடனர்.

| பகுதியடி | | இறப்பு | எதிர்வு |
|---|---|---|---|
| ஆ | (பழைய) | ஆஇ (ஆய்) | ஆஉம் (ஆம்) |
| | (புதிய) | ஆகி | ஆகும் |
| போ. | (பழைய) | போஇ(போய்) | போஉம்(போம்) |
| | (புதிய) | போகி | போகும். |

இதுபோன்றே 'ஆநின்று' பிறிதோர் உருவத்திலும் நிகழ்ந்திருக்கலாம்.

| | |
|---|---|
| ஆநின்று | செய்யாநின்று |
| ஆகிநின்று | செய்யாகிநின்று |
| ஆகின்று | செய்யாகின்று |

'கின்று' என்ற உருவம் பெற்ற அளவில் இடைநிற்கும் னகரவொற்றுக் கெட்டு அது 'கிறு' என வரவும் வினைப பகுதியடியோடுதானே சேர்க்கவும் பெற்றதென்றும் கூற லாம். 'செய்கின்ற' என்பது 'செய்கிற' என்று குறுகுவது மியற்கையே.

இப்பிற்கால மாற்றுருவங்களில வரும் 'ஆ' 'கு' என் பன முற்காலத்தில் அவை தந்த இறபபு, எதிரவு என்னும் காலப்பொருளை முற்றுமிழந்தன. நிகழ்கால இடைநிலை யைக் குறித்த பவணந்தி சூத்திரத்தில

'ஆநின்று, கின்று. கிறுமூ விடத்தின்'

என்னுமடி அவ்விடைநிலைகள் எழுந்த காலத்தை வரலாற்று முறையிற்காட்டும் தொடரென்றே சொலலலாம்.

'செய்து' என்ற சொலலில் இறந்த காலம் காட்டும் 'து' இடச்சுட்டுப் பெயரின் உருவமாகிய 'உது' என்பதன் மரூஉவே யென்று டாக்டர் கிற்றல கூறுவது அத்துணைப பொருத்தமாகத் தோன்றவிலலை. எலலா திரவிடமொழிக் கண்ணும் 'உது' 'உந்து' என்பன நிகழ்காலம் குறித்து நிற் கும் விகுதியென முன்னமே காட்டபபட்டது. 'செய்குதும்' என்பது பண்டைத்தமிழிலுங்கூட நிகழ்காலத்தையோ எதிர்காலத்தையோ காட்டினதே யொழிய இறந்தகாலம் சுட்டினதே இல்லை. பிற்காலத்திற் காலபபொருள் பிறழ்ச்சி யுற்றதெனக்கூறினல்லது அன்னார் மதத்தைத் தாபிக்க இய லாது.

எவ்விதம் நோக்கினும், நிகழ்காலத்தைக் குறிக்கத்தக்க இடைநிலை, விகுதிகள் முதன்முதல் இல்லாதிருந்தமையால் முழுச்சொற்களையே துணைவினையாகக்கொண்டு நிகழ்காலம்

காட்டியிருத்தல் வேண்டும். முழுச்சொற்றுணைக்கொண்டு பிறகாலங்களையும் குறித்துள்ளாரென்று முன்னரே காட்டலாயிற்று. அதேபோல் நிகழ்காலத்தையும் இறந்தகால வினையில நின்றும் செய்தமைத்துக் கொண்டனரென்பது கொள்ளத்தக்கதேயாம்.

| முதனிலைவினை | இறப்பு | நிகழ்வு |
| --- | --- | --- |
| 'செய்' | செய் + ஆ | செய்யா + நின்று |
| | = செய்யா | = செய்யாநின்று |
| | செய் + ஊ | செய்யூ + உந்து |
| | = செய்யூ. | = செய்யூந்து |
| | | = செய்யுந்து. |

இவ்வுந்தீற்று வினைமுற்றுக்களை எடுத்துக்கையாண்ட கோவூர்கிழார் ஆதிய ஏழுபுலவர்களும் காலத்தால தொல்காப்பிய முனிவர்க்கு முந்தினவர்களென்று கோடலில் ஓர் இழுக்குமில்லை. அன்னார் இயற்றிய செய்யுட்களின் நடையை நோக்கினும் அசசெய்யுள எல்லாம் மிகப பழைய இலக்கியத்தொகுதியின்பாற் படுவனவேயாம். ஆரியசசொற்பிரயோகமே இச்செய்யுட்களில இல்லையென்று கூறலாம். 'உலகு' 'திசை' 'மணி' போன்ற சொற்கள சிலசெய்யுளில் வந்துளவேனும் 343, 352, 384, 395, 396 என்ற எண்களுள்ள பாடலகளெல்லாம் ஆரியக் கலபபிலலாச் செந்தமிழ்ச் சொல்வளன் பொருந்தியன. டாக்டர் கால்டுவல கூறியவாறு தமிழோடு ஆரியக்கலபபு இருபடித்தாய் நிகழ்ந்துளளதெனக் கூற இடமுண்டு. 'உலகம்' முதலிய வடமொழிச் சொற்கள் தமிழில முதற்கண் புகுந்து தம்முருவிற் பெரிதும் வேற்றுமையடைந்துள்ளனவாம். தமிழ் எழுதாமொழியாய் நிகழ்ந்தகாலை இவை வந்து செறிந்தனவென்பது அவரது கொள்கை. அதனுண்மையை இங்கு ஆராயவேண்டிய ஆவசியமின்று. ஆரியச்சொற்கள் தம்முருவில் மாறுபடாத 'தற்சமம்' என்னலாம் விதத்திற் பிற்காலத்துத் தமிழில் வந்து புகுந்தன பல. இவற்றின்

கோவூர்கிழார் காலம்: அவர் செய்யுளின் சொல் நடையால்.

வேறுபாடில்லா ஆரிய உருவமே அச்சொற்களின் புதுவரவைக்காட்டுமென்னவும் கொண்டனர். இவர் கூறும் இப்பொதுவுண்மைகொண்டு நோக்கினும் நாம் ஆராய எடுத்துக் கொண்ட 11 செய்யுட்களிலும் 5 பாடல்களில் தனித்தமிழே இயலவதாகவும் எஞ்சிய 6 பாடல்களில ஒன்றிரண்டு ஆரியச சொற்கள உருமாறிய பயின்று வந்திருப்பதாகவும் காணலாம். ஆதலான் இவற்றைப புறநானூற்றின்கண் திரட்டபபட்டிருக்கும் 400 செய்யுட்களிலும் மிகபபழைமை வாய்ந்த பகுதியிற் சேபபது ஒருவிதத்தானும் வழுவாகாது. சொல நடை பற்பல காரணச்செறிவால் மாறுதலடைவதாதலின்ல அது நமக்குக் கால நிசசயத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாய் அமைவதற்கிடமின்று. எனினும், பொதுவாய் நோக்குமிடத்துச் சொல் நடையில் நின்றும் ஒரு செய்யுளின் புதுமை பழைமைகளை ஒருவாறு ஊகித்தறியலாம். தமிழணங்கின் மேனியில் வடமொழி அணிகள் ஏராளமாகப் பூணவந்தது தமிழர்களின் பிற்கால ஜீவிதத்தில நிகழ்ந்ததே யாதலினலை வடமொழிச் சொற்கள் புகுந்த செய்யுட்களையெல்லாம் பிற்காலச் செய்யுட்களெனக் குறியீடு செய்யின் குற்றமாமா? தனிததனிச செய்யுட்களை நோக்கி இங்ஙனம் கூற வியலாதாயினும் ஒரு புலவரின் செய்யுளனைத்தும் ஆரியக் கலப்பைப பெரும்பாலும் காட்டாதொழியின் அபபுலவரின் பழைமைக்கு அதனையும் ஓர் அளந்துமதிகோலாகக் கொளளலாகாதா? ஆரியச் சொற்களின் கலபபையே அளந்தறிகோலாகக்கொண்டுப பண்டைத்தமிழ் நூலகளை அளந்து நோக்குங்கால் அந்நூற்றொகுதி முக்கூறுயப் பிரிவடையக் காண்போம்.

அவையாவன:—

(i) ஆரியம் கலவாத் தனித்தமிழ்ச் சொற்களால் யாக்கபபட்ட செய்யுட்கள்.

(ii) ஆரியச்சொல் உருமாறிக்கலந்த தமிழ்ச்சொற்களால யாக்கப்பட்டவை.

(iii) ஆரியச்சொல் உருவ வேறுபாடுற்று கலந்த தமிழ்ச்சொற்களால் யாக்கப்பட்டவை.

நாம் ஆராய எடுத்துக்கொண்ட செய்யுட்கள் யாவும் முன்னிரு பகுதியினுள்ளமையுமே யன்றிக் கடைப்பகுதியினுள் வந்தமையா.

கோவூர் கிழாரின் காலம்: அவர் செய்யுளின் பொருட் போக்கால்.

செய்யுளின் சொல் நடையை நோக்காது அவற்றுள் எடுத்தாளப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டு நாம் ஆராயினும் அவை சேயவொரு பழங்காலத்து வழக்க ஒழுக்கங்களைக் குறித்துப் பாடப்பட்டனவே யாமெனக் காண்போம். மக்களின் எண்ணங்களும், உணர்ச்சிகளும், மொழிகளும் காலத்தால் வேற்றுமையடையுமென்பது மெய்யே. ஆயினும், ஒரு மொழியின் மாற்றத்தினைக் காட்டிலும் பலவாற்றானும் மிகப் பலவேயாம் எண்ணங்களும் உணர்ச்சிகளும் அடையும் மாற்றங்கள். மொழி மாற்றத்தைத் தகைவதற்கெனவே 'எழுத்தியன் முறை' எனுமொன்றெழுந்தது. எண்ணுணர்ச்சிகளின் மாற்றத்தை அவ்வாறு கட்டுப்படுத்த ஒரு கருவியும் ஏற்படாததினால் அவை பல துறைகளிலு மிறங்கிப் பலவகையாய்ப் பரிணமித்துச் செல்கின்றன. இக்காரணம்பற்றி மொழியளவையினும் எண்ணுணர்ச்சி யளவையே ஒரு நூலின் புதுமை பழைமையினைக் குறைபாடின்றி யுணர்த்தும். முன்னைய அளவை சிலகால் பொய்த்துவிடினும் பின்னையது உண்மை சுட்டலிற் றவறாது. இப்பிரமாணம் கைக்கொண்டே சரித்திராசிரியர்கள் பண்டைய வழக்க ஒழுக்கங்களின் கால நிர்ணயம் கணிக்கலாயினர். அம்முறையினை நாமும் பின்பற்றி நமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட 11-செய்யுட்களையும் நோக்கின் அவற்றுட் கூறப்படுவனவெல்லாம் பண்டை இலக்கியங்களின் முதற்படியில் நிற்கத்தக்கனவே யாமெனக் காண்போம். மனிதன் இயற்கைக்கண் படிந்து திளைத்து உயரிய அறநெறிப் போக்கொன்றும் மனத்துறாது புலனின்பம் துய்க்கும் வாழ்க்கையைத் தானே இச்செய்யுட்களெல்லாம் பெரிதெடுத்துப் பாராட்டாநிற்கும்.

"திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண் குரவைச் சீர்தூங்குந்து"

"முண்டகக் கோதை யொண்டொடி மகளி
ரிருமபனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறு
மோங்குமணற் குவவுததாழைத்
தீநீரோ டுடன் விராஅய்
முந்நீருண்டு முந்நீரபபாயுந்து"

"ஒண்டொடி மகளிர பொலங்கலத தேந்திய
தண்கமழ் தேறன் மடுபப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெரும வாங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப" —புறம். 24.

"விழவின் றுயினு முழவா மண்டை
யிருங்கெடிற்று மிசையொடு பூஙகள வைகுந்து"

"நிணம பெருத்த கொழுஞ்சோற்றிடை
மண்ணுணப புகழ்வேட்டு
நீரநாண நெய வழங்கிப
புரந்தோ னெநதை"

"உண்ட நன்கலம் பெய்து நுடககவுந்
தின்ற நண்ப லூன்றோண் டவும்
வநத வைக லல்லது
சென்ற வெல்லைச் செலவறியேனே" —புறம். 384.

"குறுமுயலின் குழைச்சூட்டோடு
நெடுவாளைப் பல்லுவியற்
பழஞ்சோற்றுப புகவருநதி" —புறம். 395.

"கொழுநதடிய சூடென்கோ
வளநனையின் மட்டென்கோ
குறுமுயலின் நிணம் பெயதந்த
நறுநெய்ய சோறென்கோ" —புறம். 396.

அக்காலத்திற் காட்டுவழிகள் விற்றூங்கித் திரிதரும் கள்வரால நிறையபபட்டிருந்தமையைக் கீழ்த்தரபபடும் அடிகள் நன்றாகக் காட்டும்.

" புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறுமபின்று " —புறம். 386.

அக்காலத்தில் மணங்குறித்துத் தந்தை கொடானாயி னுடம் போர்வலத்தாற் பெண் கொண்டனரென்பதைக் கீழ் வரும் அடிகள் செவ்வனே தெளிவுறுத்தும்.

" நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையு ரல்லோர வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅ னாயின் வந்தோர
வாய்பபட விறுத்த வேணி யாயிடை
வருநதின்று கொல்லோ " —புறம். 343.

இசசெய்யுட்களோடு கீழே தரபபடும் சில செய்யுட் களை ஒபபிட்டு நோக்குக.

" பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்ரு தாகலிற்
கைவிட் டனரே காதலா..........." —புறம். 358.

" யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும பிறாதர வாரா
நோதலுந் தணிதலு மவற்ரோ ரன்ன
சாதலும புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென றலு மிலமே மின்னொடு
வானந் தணடுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேயாற்று
நீரவழிப படூஉம புணைபோ லாருயிர்
முறை வழிப படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிநதன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே " —புறம். 192.

" உண்டா லமம இவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலா

துஞ்சலு மிலர் பிற ரஞ்சுவ தஞ்சிப
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளலர்" —புறம். 182.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே" —புறம். 183.

இவ்வண்ணம் அறத்தாறு, ஜாதிக்கட்டுப்பாடு, நிரம்பிய சமயக்கொள்கை முதலியன எடுத்து நுவன்ற பின்னைய செய்யுட்களையும் முன்னைய இயற்கை வாழ்க்கைச் செய்யுட்களையும் தூக்கி நோக்கின் அவை தம்முள் சில நூற்றாண்டாவது இடையிட்டிருக்கவேண்டுமென்று முடிக்கலாம். இவற்றை விரவிக் கோத்து ஒரு தொகை நூலாக்கத் தொகுத்தார் சரித்திராசிரியரல்லர். ஆதலின் அவற்றின் காலக்குறிகளைச் சிறிதும் எண்ணாது கை நழுவ விட்டனர். செய்யுட்களின் இலக்கண ஒற்றுமை வேற்றுமை ஒன்றனையே கருவியாகக் கொண்டு செய்துள்ள தொகைநூலே இது. புறநானூற்றின் தற்கால இலக்கிய ஒழுங்கு சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் மலைவூட்டும்படி அமைந்துள்ளதென்று கூறல் மிகையாகாது. சரித்திர ஆராய்ச்சியாளர் தொகை முறையைத் தூரத் தள்ளிவிட்டு சொல்நடை, பொருட்போக்கு, கிடைத்தற்குரிய அகப்புறச்சான்றாகிய சரித்திரக் குறிப்பு என்பனவற்றால் இவற்றைக் காலவரையறையுட் பெய்து முறைப்படுத்திக்கொள்ள வேண்டியது பெரிதுமவசியம்.* இது நிற்க. எடுத்துக்காட்டிய 11 செய்யுட்களிற் கூறப்பெற்றனவாய இயற்கைவாழ்க்கைக் குறிப்பினின்றும் அவை புறநானூற்

* பண்டைக்காலத்துத் தமிழகத்தில் வாழ்ந்திருந்த அரசர், புலவர் முதலாயினரின் சமகால வரிசைப்பட்டிகை (Synchronistic Table) ஒன்று இப்பொழுது எழுதப்பட்டு வருகின்றது. இப்பட்டிகையினுள் வந்தமையும் புலவரும் அரசரும் பத்துத் தலைமுறையளவு (அதாவது 250 வருடங்களாக) தொடர்ச்சியுற வாழ்ந்திருந்தாராவர். தொகைநூற் செய்யுட்கள் பற்பலகாலங்களில் இயற்றப்பட்டன வென்பதற்கு இதுவே தக்க சான்றாம்.

றச் செய்யுட்களின் முற்பகுதியைச் சேர்ந்தனவென்று தாபிக்கத் தடையென்னை? அங்ஙனமாயின், அவற்றின் சொல் நடையில பண்டை மொழிவழக்காறென்று புகுந்து கிடப்பது ஆச்சரியம் தரத்தக்க தொன்றன்று.

**கோவூர் கிழாரின் காலம்: சமகாலத்தவரின் பழைமையால்.**

சங்கப்புலவர்களென்று கொண்டாடப்படுவாரிற் பரணர் மிக்க பழைமை வாய்ந்துள்ளாரென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த முடிவே. இவர் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பாடியவர். இவ் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி கரிகாலசோழன் தந்தையெனப் பொருநராற்றுப்படை 130-ல "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன" என வந்துளளமையால வெளியாம். உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின் மகளும் கரிகாலனது சகோதரியுமான சோணையை சேரன செங்குட்டுவனது தந்தை மணந்தனனென்பதற்குச் சிலப்பதிகாரம சான்று பகர்கின்றது*. சேரன செங்குட்டுவன்

* பரணர், கோவூர்கிழார் இவரது காலநிர்ணயம சிலப்பதிகாரத்தைக் கொண்டு செயதுமுடிக்க வியலுமாவென்று சிலர் ஐயுறக் கூடும். சிலப்பதிகாரம புறநானூற்றுக்குப் பிற்போந்த நூலேயாயினும் அதிற் கூறப்பட்டிருக்கும சிற்சில பரம்பரை விஷயங்களைச் சரித்திர உண்மைகளென ஒப்புக்கொள்வது தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர் முறைக்கு முரணாகாது. எனினும் அவ்வுண்மைகள் ஒரு காவிய நூலின்னுள்ளேறித் தம்மியல்பிற்றிரிந்து போயினமையால், அவற்றை அசைவற நாட்டப்படும ஏனைச்சரித்திரவுண்மைகளோடு சேர்த்தெண்ணச் சிலர் திகைப்பது இயற்கையேயாம். அன்றாகக் வேறொரு வழியிலும் பரணர் கோவூர்கிழார் முதலாயினாரின் மிககடுத்த காலத்தை எடுத்துவிளக்க முடியுமென றெண்ணுகிறேன். கரிகால வளவனுடைய தந்தை உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியைப் பாடியவர் பரணர்; கோவூர் கிழாரோ கரிகாலனுடைய மக்கள் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி முதலாயினாரைப் பாடியவர்; இதனால் பரணர் காலத்திற்கும் கோவூர்கிழார் காலத்திற்கும் இடையீடு இரண்டு தலைமுறை யளவேயாமென்பது தெளிவாம்.

காலத்தில் புகாரில் அரசுபுரிந்த சோழன் நலங்கிள்ளி சோழன் கரிகாலனுடைய மகனென ஊகிக்கலாம். இவன் செங்குட்டுவனுடைய மைத்துனனென்று **சிலப்பதிகாரம்** நீர்ப்படைக் காதையில்,

> "மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
> மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
> வொத்த பண்பின ரொன்பது மன்ன
> ரிளவரசு பொறாஅ ரேவல் கேளார்
> வளநா டழிக்கு மாண்பின ராதலி
> னொன்பது குடையு மொருபக லொழித்தவன்
> பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்"

எனவரும் அடிகளால் அறியலாம். இதனாற் சோழன் நலங்கிள்ளியைச் செங்குட்டுவனுடைய மாமன் கரிகாலசோழனது மகனெனக் கூறுதல் பொருத்தமேயாம். கரிகால சோழன் மகனாய நலங்கிள்ளியைப் பாராட்டிய பல பாடல்கள் புனைந்துள்ளார் கோவூர்கிழார். இதனால் கோவூர் கிழாரின் காலமும் பரணரது காலமும் இரண்டு தலைமுறையளவே இடையிட்டிருக்கவேண்டுமெனச் சொல்லலாம். இவ்விருபுலவர்களையும் ஒரு நூற்றாண்டினுள் ளிசைத்துக் கொள்ளுதல் எவ்விதத்தினும் இழுக்காகாது. கோவூர் கிழார்க்கு இரண்டு தலைமுறை முந்தினவரான பரணரும் இவ்வுந்தீற்று வினைமுற்றுப் பிரயோகத்தைக் கையாடியுள்ளாரென்று **புறம்.** 343, 352-ஆம் பாடல்கள் காட்டும். நமக்குக் கிடைத்திருக்கும் சங்கநூற்றொகுதியின் முற்பகுதியைச் சேர்ந்த பாடல்கள் சிலவற்றுள் உந்தீற்று வினைமுற்று வந்து பயின்றிருப்பது அப்பிரயோகத்தின் பழமையினை நன்கு வலியுறுத்தும்.

முடிவுரை. முற்கூறிப்போந்த நியாயங்களைத் திரட்டி ஒரு வழிப்படுத்து நோக்கின தொல்காப்பியம் இயற்றப்பெற்ற காலத்திற்கு முன்தானே இவ்வுந்தீற்று வினைமுற்றுப் பிரயோகம் தமிழகத்தில் வழங்கிப் பின்னர் அருகலுற்று மாண்டுபோயிற்

றென்றே முடிவுசெய்ய வேண்டியதாகின்றது. இம்மொழி வழக்காற்றைக்கொண்டு தொல்காப்பிய நூலின் காலநிர்ணயம் செய்வது உசிதமாகுமே தவிர, தொல்காப்பியத்தை முன்னூலெனக் கூறி இதனைப் பிற்போந்த வினைமுற்றுப் பிரயோக விசேடமென ஒதுக்குதல் ஒருவகையானும் செல்லாது. தொல்காப்பியம் தற்காலம் நிகழும் சங்கவிலக்கியங்களுக்குப் பின்னுதித்த இலக்கண நூலெனக் காட்டத் தக்க பல அகச்சான்றுகளைத் தன்னுட்டாங்கி நிற்பினும் அவற்றில் ஒன்றனை மட்டும் இங்குச் சுட்டுகின்றோம்.

> " முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
> பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
> யாற்றுப்படை மருங்கிற்போற்றல் வேண்டும் "

என்பது அந்நூல், சொல்லதிகாரம், எச்சவியல் 455-வது சூத்திரம். ஆற்றுப்படைச் செய்யுளின்கண் நிகழும் ஓர் வகை வழுவமைக்க எழுந்ததாகும் இச்சூத்திரம். முன்னிலை சுட்டிய வொருமைச்சொல் பன்மைகொண்டு முடியினும் ஆற்றுப்படைச் செய்யுளில் வரைந்து ஒழிக்கத் தக்கதன்றென்பது இதன் கருத்து. இதற்கு மலைபடுகடாத்தினடிகளை எடுத்து உதாரிக்கின்றார் இளம்பூரணர். இதனால் 'மலைபடுகடாம்' * போன்ற ஆற்றுப்படைச் செய்யுட்களி லமைந்திருக்கும் வழுவெனத் தோன்றுமொன்றைக் கண்ணுற்று அதனை அமைக்கச் சூத்திரம் இயற்றினார் தொல்காப்பியர் என்று கொள்ள வேண்டுமே தவிர ஆற்றுப்படைச் செய்யுட்கள் எழு முன்னமே அவற்றுள் வரற்பாலதாய வழுவையுஞ்சுட்டி அதனை அமைக்கும் முறையையும் வகுத்தார் தொல்காப்பியர் எனக்கூறல் எங்ஙனம் பொருந்தும்? 'மலைபடுகடாம்' போன்ற கடைச்சங்கச் செய்யுளைக்கொண்டு தொல்காப்பியர் நூல் இயற்றிலர்; கடல்கோளால் மாண்டுபோயின சில ஆற்றுப்படைச் செய்யுளைக்கொண்டே அன்னார்

* பொருநராற்றுப்படையிலும் பெரும்பாணாற்றுப்படையிலும் இவ்வழு வந்து அமைவுற்றிருப்பதனைக் காணலாம்.

இலக்கணம் புனைந்தாரெனச் சிலர் கூறலாம். இக்கூற்றால் தொல்காப்பியத்தின் பழமையும் பெருமையும் பெருகிவிடு மென்பதே அவரது உட்கிடை. ஆயின், உண்மையில அது தொல்காப்பியம் என்னும் சிறந்தவோர் இலக்கண நூலை இலக்கிய அடிபபடை யிலலா ஒரு ஆகாயமாளிகை யாக்கி வைக்கின்றது. இதனால் அந்நூலுடையும் மேம்பாடு யாது மிலலே. அன்றியும், வடமொழியில் பாணினியின் சிறந்த இலக்கணம் தோன்றா முன்னரே, கார்க்கியர், சாகடாயனர் முதலிய இலக்கண ஆசிரியர்களது நூல்கள் எங்ஙனம் வழங்கிய பின்னிறந்து பட்டனவோ அங்ஙனமே தொல்காப் பியமென்னும் விரிவுடையதும் வடமொழிப பயிற்சியைச செவ்வனே காட்டுகின்றதுமான இலக்கண நூலொள றதித்த அளவில சங்க விலக்கியங்களைத் தரத்தக்கனவாய் நிலவி யிருந்த தனித்தமிழ் இலக்கண நூல்கள் மாண்டுபோ யிருக்கலாம். கடலகோள எனவொன்று வேண்டபபடாதே பண்டை யிலக்கணங்களும் இலக்கியத்துட் சிலவும் மாண்டு போயிருக்கக் காலபபழைமை யொன்றே போதும். ஓலையிலு எழுதபபட்டவை செபபேடுகளிற் பொறிக்கபபட்டவை யாகா. நூதனமாகப பிரதிசெய்து கொள்ளாவிடின் ஒரு சுவடி 500 வருடம் தான் நிலைத்து நிற்குமோ வென் றையுறலாம். தொலகாபபியம் என்னும் பேரிலக்கணம் ஒன்று தோன்றியகாலை அதன்முன் வழங்கிய சிற்றிலக் கணங்கள் பல போற்றுவாரின்றி மாண்டு போயின வென்று கொளவதே தமிழ் மொழியின் சரித்திரத்திற் கும் தமிழ் இலக்கிய சரிததிரத்திற்கும் பொருத்தமான முடிவாம். இதற்குத் தொல்காபபியச் சூத்திரங்களும் பலவிடங்களில் சான்றுபகரா நிற்கும். 'என்ப' 'மொழிப' என்று முடியும் சூத்திரங்களைத்தான் 'என்று கூறு வர் ஆசிரியர்' எனச சில விடங்களில் நசசினார்க்கினியர் பொருளுரைத்து ஆசிரியர் அகத்தியனாரைக் கொண்டுவந்து புகுத்த முயன்றுள்ளாரெனினும், அவ்வாறு செய்ய இடந் தராப பல சூத்திரங்கள் ஆங்குக் காணப்படுகின்றன. "என்ப

வறிந்திசினோரே''. "என்ப உணருமோரே'' "என்மனார் புலமையோரே'' "நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே'' என்று வரும் தொடர்களெல்லாம் ஆசிரியர் அகத்தியனாரைக் குறியாது இலக்கணபபுலமை வாய்ந்த முன்னோரிற் பலரைக் குறித்தனவென்றே கொளளவேண்டும். இனி, தொலகாப்பியா சுட்டும் அவ்விலக்கணபபுலமை வாய்ந்த முன்னோர் வடமொழி இலக்கணநூல வல்லாரோ அல்லது தென்மொழி இலக்கணநூல வலலாரோ வென்று ஆராய்ந்தறிந்துகொளல் வேண்டும். வடமொழியில நின்றும் முற்றும் விலகித் தனியே நிற்பது தமிழ்மொழி என்பதுவே தொல்காபபியனாரின் மதம். அவரது நூலின் சொலலதிகார எசசவியலொன்றே இதனை நன்கு விளக்கி வலியுறுத்தும். தமிழ்மொழிக்கண் நிலவும் சொற்களை நான்கெனப பாகுபாடு செய்து 'இயற்சொல்' 'திரிசொல்' 'திசைசசொல்' என்னும் மூன்றினையும் தமிழ் மொழியெனக் கணித்தும் நான்கா வதாய 'வடசொல' என்பதை யிறுதியில் வேறாற வைத்தும் தொல்காபபியனார் கூறியிருப்பதே அவரது கொள்கையைத் தெளித்துக் காட்டும். இங்ஙனம் தமிழைத் தனிமொழியெனக்கொண்ட தொலகாபபியனார் தமிழிலக்கணநூல இயற்றபபுக்குழி வடமொழிவாணரின் மதத்தைத் தமக்கு மேற்கோளாகத் தழுவினரென் றுரைபபது ஒருசிறிதும் பொருந்துவதன்று. பொருளதிகாரம் களவியலில 'என்மனார் புலவர்' என்னும் தொடர் பலசூத்திரங்களில் வரக்காண்கின்றோம். இவை யெல்லாம் வடமொழி யிலக்கண ஆசிரியர்களைக் குறித்தன வென்று யாரேனும் உரைபபரோ? அதனால தொல்காபபியர் தம்நூ லுள்ளே குறிக்கும் புலவரெல்லாம் அவரது காலத்திற்கு முன் தமிழகத்தில நின்று விளங்கிய தமிழறிஞரே யாவர். அன்னார் நூலகள் யாவும் காலக்கணக்கன் வாய்பபட்டொழிந்தனவென்று கொள்வதே புத்திக்கும் உண்மைக்கும் பொருத்தமாய முடிவு.

---

மதராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர்.

# மொழி அட்டவணை.


அ.

அகத்தியம், 23
அகத்தியனார், 60, 61
அகம் (அகநானூறு), 32, 39, 40, 41
அகராதி, 2
அமைதி-இலக்கண, 1, 2, 3
அளவை —எண்ணுணர்ச்சி, 53
  மொழி, 53

ஆ.

ஆநின்று, 47, 49, 50
ஆராய்ச்சி, 16, 25
  தத்துவ, 48
  சரித்திர, 56
ஆராய்ச்சியாளர்
  திராவிடமொழிநூல், 10
  மொழிநூல், 45
ஆரிய உருவம், 52
  கலப்பு, 51
  சொற்பிரயோகம், 51
ஆரியம், 52
ஆற்றுப்படை, 59
  சிறுபாண்,
  பெரும்பாண்
  பொருநர், 57

இ.

இடைச்சங்கம், 23
  சொல், 12, 17, 18, 27, 28
இயற்கைச் சாத்திரம், 4, 22
இயற்கைத் தமிழ், 7
இயற்சொல், 26
இலக்கண ஆசிரியர், 43, 60
  பண்டை, 20
  வடமொழி, 61
  சரித்திரம், 42
  நூல், 24, 39, 60, 61
  நூலார், 7, 29, 39, 42, 44, 45
இலக்கணம், 5, 6, 21, 24, 43, 60
இலக்கியத் தொகுதி, 51, 53
  பண்டை, 46
இலக்கியம், 7, 8, 46
இழிவழக்கு, 22
இளம்பூரணம், 32

உ.

உச்சாரணம்—மொழி, 34
'உத்சு', 37, 38
'உத்து', 37, 38
'உது', 37, 38
'உந்தீறு', 11, 17, 20
'உந்து', 1, 9, 33,—36, 38, 39, 46, 47, 48, 50
'உந்நு', 8, 9, 35
உலகவழக்கு, 26, 29
உற்பத்தி—தெய்வீக, 6
உறுப்பு—வினைமுற்று, 3
  பாட்டு, 15

எ.

எச்சவினை, 20
எச்சவீறு, 29
எட்டுத்தொகை, 9, 10
எண்ணேகாரம், 19
எழுத்து—மெல்லின, 9
  வரிவடிவு, 34

ஒ.

ஒரு சிறைபபெரியனூா, 10, 22
ஒலிகருநது, 18
ஒற்றுமை நயம, 40

க.

கடலகோள, 23, 24, 59
கடைச்சஙககாலம, 23
கந்தபபிளளை, 10
கரிகாலன, 57
'கருந்தமிழ', 8
கருமபனூா கிழான், 10
கருஆா கதபபிளளை, 10
கலிதொகை, 32, 41, 42
கலிதொகைச செயயுள, (4, 71)
கன்னடம, 2, 4, 7, 36, 38
கன்னடா, 5
காலககுறி, 48
காலம—சஙக, 8, 23
செந்தமிழ்க, 7
காவியநூல், 57
கிராமிய மொழி, 8
கிளளிவளவன, 11
'கிறு' 47, 50
'கின்று', 34, 47, 48, 50
குறியீடு, 4
திணைபாலிடக, 5
குறுநதொகை, 39, 40, 41
செயயுட்கள, 39, 79, 199, 290
கூன, 13
கேரள பாணினீயம, 33
கொடுநதமிழ, 7
கொளகை—அபிவாததனவாதக், 4
சமயக, 56
கோஆா கிழாா, 10, 18, 20, 25, 26, 51, 53, 56, 57, 58

ச.

சஙகநூற்றொகுதி, 24
சங்கபபுலவா, 57
சரிததிர ஆசிரியா, 56
ஆராய்ச்சிக் குறிப்பு, 56
சரிததிரம்—இலக்கண, 42
தமிழிலககிய, 60
மொழிகள, 43
சிததாந்தம்—ஒலிநூற், 34
பாஷா சாஸ்திர, 4
சிலபபதிகாரம், 14, 58
சிறுபாணாற்றுபபடை, 28
சுட்டுபபெயா, 47
செங்குட்டுவன், 58
செநதமிழ், 5, 6, 7
செநதமிழ்ச செய்யுள வழககு, 29
செநதமிழ்சசொல், 51
செயயுள வழககு, 29
சேனாவரையா, 21, 43
சொல்—அசைபபுச், 14
ஆரியச், 52, 53
இயற, 26, 61
தமிழச, 52
திரி, 61
திசைச, 61
சொல நடை, 52, 56
சொலலதிகாரம், 61
சொறகள—இயற், 26
உநதிற்று, 19, 25, 29
செநதமிழச, 51
வடமொழி, 52
சோணாடு, 7, 11
சோழன்—உருவபபஃறோிளஞ
சேட்சென்னி, 57
குளமுற்றததுத துஞசியகிளளி
வளவன, 11, 18
நலஙகிளளி, 11, 58

ட.

டாக்டா கால்டுவெல், 51
கிரால், 49
கிற்றல், 49, 50
குணடாட்டு, 49

த.

தநககரம, 34
தமிழ, 4, 8, 20, 33, 37
  இயற்கைத, 7
  கருந, 8
  கொடுந, 7
  நாடு, 26
  பண்டைத, 38, 47
  பூாவகாலத, 7
தமிழகம, 7, 22, 29, 58
தமிழா, 7, 52
  தறகாலத, 34
தமிழிலககண நூல, 61
தமிழிலககிய சரிததிரம, 60
தலைச்சங்கம, 23
தறசமம, 51
திரிசொல, 26
திருமுருகாறறுபபடை, 13
துளு, 2
தெலுஙகா, 5
தெலுஙகு, 2, 3, 7, 36, 38
  தற்காலத, 38
  பண்டைத, 11
தொகைநூல, 10
தொலகாபபியம, 22-25, 60
தொலகாபபியனா, 7, 15, 17, 20, 21, 24, 25, 27, 28, 51, 61

ந.

நக்கீரா, 11, 13, 21, 22
நசசினாக்கினியா, 21, 32, 43
நலஙகிளளி, 11
நாஞசில வளளுவன, 10
நாடு-கொடுந்தமிழ், 7
  மலை, 22
நிகண்டு, 2
நியதி-இயற்கைச் சாஸதிா, 4
  இலககண, 2, 7
  ஓரினமபடையுாா, 33
  மூக்கொலி புணா, 33
நிலை-இலக்கண, 7
  இலக்கிய, 6
  இயற்கை, 6, 7
  எழுத்து, 6
  பேச்சு, 4
நிலைக்குந்து, 18
நூல-இலககண, 5
நெடுஞ் செழியன், 10

ப.

பணடமாற்று, 3
பணடைததமிழ், 50
பததுபபாட்டு, 9
பாணா, 10, 21, 57, 58
பவணநதி, 28, 29, 31, 32, 41
பாஷை, திராவிட, 33
  திராவிடமூல, 9
பிடவூர் கிழான், 11
பிரயோகப-ஆரியச்சொற், 51
  இடைசசொற், 1
  தமிழப, 6
  வினைமுற்றுப, 8, 25,26, 29, 30
புறததிணை நன்னாகனா, 10
புறநானூறு, 9, 10, 11, 13, 14, 15, 19, 32, 34, 39, 42, 52 55, 56, 58
பெயா-தொழிற, 41
  வினையாலணையும், 41, 42, 44
பெயரெசசம, 12, 16, 19, 20, 29
பொருட்போககு, 56
பொருள கோளமுறை, 19, 20
போலிசசொல, 27

ம.

மஙகலவாழ்ததுபபாடல், 14
மதுரை, 11
மரூஉ, 6
மலைநாட்டாா, 5, 26
மலைநாட்டு வழக்கு, 7, 8
மலைபடுகடாம, 15
மலையாளம, 2, 4, 6, 33, 38
மலையாள நாட்டாா, 9
மலையாளி, 34

மாங்குடிகிழார், 10
முடிபு-இலக்கண, 16
முழுச்சொல, 27
மொழி-உலகநடை, 6, 48
  கிராமிய, 8
  தமிழ், 8, 60, 61
  திராவிட, 2, 3, 5, 26, 33, 35, 45, 50
  மலையாள, 5, 8, 9, 30, 33, 35
  வட, 51, 52, 61
மொழியுற்பத்திக் காலம், 26
  நூல, 23
மொழியளவை, 53
  பண்டைத்தமிழ் மொழி, 57

வ.

வழக்கு-இழி 6
  உலக, 9
  செய்யுள, 29
  தமிழுலக, 26
  பரூஉ, 6
வாக்கியம, 1, 3
வாசகங்கள், 19
வாட்டாற்றெழினியாதன், 10
வாழ்க்கை-தனித்த, 1
விடை, 3, 5
விதிகள-இலக்கண, 6
  சிறப்பு, 2
  பொது 2
வியங்கோள, 31
வியப்பு, 9
வினு, 3
வினை-துணை, 50
வினைச்சொறகள, உந்தீற்று, 20, 21, 39, 46
வினையெச்சம, 32, 37
வினை முடிவு, 15
வினைமுற்று, 4, 5, 18, 19, 20, 29
  தமிழ், 4
  மலையாள, 4
வேற்றுமை, 4, 8
  உருபு, 4

ற.

றன்னகரம, 34


மதராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர்.